உ

# சந்நிதியான் அற்புதங்கள்

## பாகம் எட்டு




ந. அரியரத்தினம்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் எட்டு

ந. அரியரத்தினம்

2018
தொண்டைமானாறு

14040CC
289488
289488 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.5

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | சந்நிதியான் |
| விடயம் | :- | அற்புதங்கள் - பாகம் எட்டு |
| ஆசிரியர் | :- | ந.அரியரத்தினம் |
| பதிப்பு | :- | முதற்பதிப்பு 2018 |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| பக்கம் | :- | 60 |
| அச்சுப்பதிப்பு | :- | தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளே | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | |
| அணிந்துரை | |
| முன்னுரை | |
| சந்நிதியான் ஒன்று | 01 - 05 |
| சந்நிதியான் இரண்டு | 06 - 09 |
| சந்நிதியான் மூன்று | 10 - 17 |
| சந்நிதியான் நான்கு | 18 - 26 |
| சந்நிதியான் ஐந்து | 27 - 31 |
| சந்நிதியான் ஆறு | 32 - 37 |
| சந்நிதியான் ஏழு | 38 - 45 |
| சந்நிதியான் எட்டு | 46 - 49 |
| சந்நிதியான் ஒன்பது | 50 - 54 |
| சந்நிதியான் பத்து | 55 - 60 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே
உண்மையான வாழ்க்கையாகும்.
இத்தகைய நிலைக்கு அடியேனை ஆளாக்கிய
எனது தாய், தந்தை இருவருக்கும்
இந்நூலை காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம குரு**

**பொன்னுத்துரை ஐயர் புவனேந்திர ஐயர் அவர்கள் வழங்கிய**

# ஆசிச்செய்தி

ஆசியாவின் முத்தாக விளங்கும் ஈழமணித் திருநாட்டின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் ஈழத்தின் அறுபடை வீடுகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலவனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக் கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டி கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள் புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர் களுக்கு கட்டுரைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பணியை திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக் கழகங்களில் சிறப்பான பட்டங்களைப் பெற்றது போலவே ஆசிரியராகவும் அதிபராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளராக வும் சேவையாற்றிய இடங்களில் அனைவராலும் பாராட்டும் வகையில் சிறப்பான சேவைகளை ஆற்றியதையும் நாம் அறிவோம்.

இதேபோன்று நீண்ட காலமாக ஆன்மீகத் துறைக்கும் சிறந்த சேவையாற்றிவரும் ந. அரியரத்தினம் கனடாவிலும் தாயக மண்ணிலும் உள்ள எமது ஆலயங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அற்புதங்களை சேகரித்து பாகம் எட்டு நூலை வெளியீடு செய்வதற்கு சந்நிதி வேலவன் கருணை புரிந்துள்ளான்.

சந்நிதி வேற்பெருமானின் புதுமைகளையும் அற்புதங் களையும் வாசிப்போர் உள்ளத்தில் தெளிவாக பதியவைக்கும் இவரது இந்த பணி மிகவும் மகத்தான பணி. இவரது பணி தொடர்வதற்கும் இவருக்கு அருளும் ஆசியும் கிடைப்பதற்கும் சந்நிதியானின் திருப்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் துணை

# அணிந்துரை

சூரனாதி அவுணர்களின் அசுரத்தன்மையை அழித்துத் தேவர் களைக் காப்பதற்காக, அதாவது அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டக் கந்தவேட் பெருமானின் அவதாரம் நிகழ்ந்திருக்கிறது. சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்போந்த அக்கினிப் பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து ஒரு திருமேனியும் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக் கரங்களும் கொண்டு ஒரு திருமுருகனாக அவதாரம் செய்தமையைக் கந்தபுராணம் எடுத்தியம்புகின்றது.

சரவணப்பொய்கையில் தோன்றிய சரவணபவன் புண்ணிய பூமியாம் பாரத நன்னாட்டில் விஷேடமாக ஆறுபடைகளிலும், மற்றும் பல முருகன் தலங்களிலும் எழுந்தருளி அடியார்கள் மிடி போக்கி நல்லருல் புரிந்த வண்ணமாக விளங்குகின்றான். பாரத நாட்டில் எழுந்தருளி அருளாட்சி புரியும் கந்தப்பெருமான் சேய் நாடாகிய ஈழமணித் திருநாட்டின்மீதும் கருணை கொண்டு ஈழத்தின் தென்பால் கதிர்காமத்திலும், கீழ்த்திசையில் சித்தாண்டி, வெருகல், மண்டூர், உகந்தமலை போன்ற ஸ்தலங்களிலும் வடபால் செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம் போன்ற வரலாற்றுப் புகழ்மிக்க ஷேத்திரங்களிலும் எழுந்தருளி அருள்மழை பொழிந்த வண்ணமாகக் காட்சி தருகின்றான். இத்தலங்களுள் எம் குருநாதனாக விளங்கும் ஆற்றங்கரையுறையும் அற்புதங் களும் திருவிளையாடல்களும் அடியார்களின் உள்ளத்தை நெக்குநெக்கு உருக வைத்துள்ளது.

இறைவன் அன்பு வடிவானவன். அன்பினாலேயே (பக்தி) இறைவனை அடையமுடியும். இறைவன் அன்பு வலையில் அகப்படுவான். இறைவனின் மேன்மைகளையும், அவன் அடியார் களுக்கு அருளும் தன்மையையும் புனித நூல்கள், சஞ்சிகைகள் மூலம் வெளிப்படுத்தும்போது அடியார்கள் இதை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மீது பக்திகொள்வார்கள். பக்தியை வளர்க்கும் ஏதுக் களில் புனித நூல்களும் ஒன்றாக அமைந்துவிடுகிறது.

இந்நிலைக்கு அமைவாகவே மாணவர்களின் கல்விக் கண்களைத் திறக்கும் ஆசானாக பேராசானாகச் சேவையாற்றிய ஓய்வுபெற்றுச் சந்நிதியானின் புகழை அகில உலகமெல்லாம் பிரகாசிக்கச் செய்து, அவனருள் பெற்ற திரு. ந. அரியரட்ணம் ஐயா அவர்கள், அடியார்களுடன் தொடர்புகொண்டு சந்நிதியானின் மேன்மைமிகு அற்புதங்களை அறிந்து மனதில் பதித்து வைத்துக்கொண்டு, அதை இதுவரை ஏழு பாகங்களாகச் ''சந்நிதியான் அற்புதங்கள்'' என்ற தலைப்பில் புனித நூல்களை வெளியிட்டுள்ளார். இந்நூல்களைப் படிப்பதன் மூலம் கல் மனமும் கசிந்துருகும். சந்நிதியான் மீது அளவுகடந்த பக்தியை ஏற்படுத்துகிறது. மறுகணமே செல்வச்சந்நிதி வேற்பெருமானிடம் சென்று அவனை வணங்கவேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறது. இதனாலேயே அடியார்களுக்கு பக்தியை மேன்மேலும் ஏற்படுத்து வதற்கு ஞானநூல்கள் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

ஆசான் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதச் சஞ்சிகையாக வெளியிடப்படும் ''ஞானச்சுடர்'' என்ற சஞ்சிகையில் முன்பு ''சந்நிதியான்'' என்ற தலைப்பில் சந்நிதியானின் அற்புதங்களைப் பல ஆண்டுகளாக எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வாக்கம் ஞானச்சுடர் சஞ்சிகையின் சிறப்பம்சங்களில் ஒன்றாக விளங்கியது. இவர் கனடா சென்றபின் அங்கிருந்து தமது பணிகளைத் தொடர்ந்து ஆற்றிச் சந்நிதியானின் அற்புதங்களைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டு வருகின்றார்.

சிறந்த கல்வியறிவையும், ஆன்மீக அறிவையும், மிக எளிமையையும் கொண்ட ஆசான் அவர்கள் தமது இப்பணி தமக்கு முருகன் அருளிய பணி என்று உணர்ந்து சந்நிதியானின் அருட்டிறனை பாரெங்கும் பரப்பி வருவது அவர் சந்நிதியானுக் காற்றும் அளப்பரும் தொண்டாகும். இதற்குரிய நிறைவான பலன் அவருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் அற்புதங்கள் பாகம் எட்டு தொடர்ந்து வெளிவர விருக்கின்றது. இந்நூலில் தொடர்ந்து சந்நிதியானின் அற்புதங் களைப் பக்தி ததும்பும் நிலையில் சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரை மிக இலகுவில் அறியக்கூடிய வகையில் மிக எளிமையான வசனநடையில், தமது ஆன்மீகக் கருத்துக் களையும் வலியுறுத்தி எழுதியுள்ளமை ஆசிரியரின் சிறந்த அறிவாற்றலை உணர்த்தி நிற்கின்றது.

இந்நூலில் பெண்ணடியார்கள் இருவருக்கு தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற சந்நிதியான் அருள்புரிந்தமை, உரும்பிராய் பேக்கரி உரிமையாளராக இருந்து பின் வறுமை அடைந்த அம்மையாருக்குக் கருணை புரிந்தமை, கண்டம்மா அம்மையாருக்கு அருள்புரிந்த தன்மை, தமக்குப் பூசனை புரிந்த பூசகரை வெளிநாடு செல்லவிடாமல் தடுத்தாட்கொண்டமை, கனடா வாழ் இளம் பூசகருக்கு அருள் புரிந்தமை, வைகாசி விசாகத் திருவிழாவின்போது பெண்ணடியாருக்கு அருளியமை, சந்நிதியான் திருப்பணிக் காரியாலயத்தில் பணிபுரியும் அம்மையாருக்குக் கதிர்காம யாத்திரைக்கு வழிசெய்து வேல் அருளியமை, புதூர் நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து வந்த பெண்ணடியாரை ஆபத்திலிருந்து காத்தமை, நித்திய அன்னப்பணி புரிந்த அடியார்க்குக் குழந்தைச் செல்வம் அருளியமை, மாதகலைச் சேர்ந்த அம்மையார் சொன்ன கதிர்காமக் கந்தனின் மெய் சிலிர்க்கும் அற்புதம்.

இவ்வண்ணம் பல மெய்சிலிர்க்கும் சந்நிதியானுடைய அற்புதங்களை இந்நூலில் காண்கின்றோம். இந்த அற்புதங்களைப் படிக்கும்போது சந்நிதியானை நேரில் தரிசித்த பலன் கிட்டும் என்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை.

இந்நூலாசிரியர் மேலும் சந்நிதியானுடைய அற்புதங்களைத் தொடர்ந்து எழுதவும், அன்னக் கந்தன் என்று அடியார்களினால் போற்றப்படும் எம்பெருமானது அன்னப் பணியைச் சிறப்பாக ஆற்றிய திருமடங்களைப் பற்றியும், இப் புனித பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானைத் தியானித்து வாழ்ந்த ஜீவன்முத்தர்களினது திவ்விய வரலாறு பற்றியும் இதுபோன்ற வேறு தெய்வீக நூல்களையும் எழுத எம் குருநாதனாகிய அருள்மிகு செல்வச்சந்நிதி வேலவன் அவருக்கு நீண்ட ஆயுளையும், உடல் உள உறுதியையும் மற்றும் சகல செல்வங்களையும் அருளவேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

வருஷப்புலம்,
சுன்னாகம்.
(காங்கேசன்துறை)
19.05.2018

சந்நிதியான் அடிமை
சிவானந்தவாரிதி கலாபூஷணம்
**சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்**
(இளைப்பாறிய நூலகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரை களாக தொடர்ந்து 2011ஆம் ஆண்டு வரை மாதாமாதம் பதினான்கு வருடங்கள் எழுதி வந்துள்ளேன். அதன் பின்பு புலம்பெயர்ந்து வாழ்ந்துவருவதால் கனடாவில் இருந்தவாறே எனது பணியை தொடர்ந்து வருகின்றேன்.

சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஏழு 07.04.2017 வெள்ளிக் கிழமை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் வெளியீடு செய்யப்பட்டது. தற்பொழுது பாகம் எட்டும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் 29.05.2018 செவ்வாய் கிழமை வெளியீடு செய்யப்படுகிறது. ஆலயத்தின் பிரதமகுரு வணக்கத்திற்குரிய ஆ. சிவசண்முக ஐயர் தலைமையில் இந்த வெளியீடு இடம்பெறுகிறது.

தாயகத்திலும் கனடாவிலும் உள்ள இரண்டு ஆலயங்களில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற அற்புதங்களும், 2005ஆம் ஆண்டு ஞானச்சுடரில் அடியேன் எழுதிய அற்புதங்கள் சிலவும் இந்த மலரில் இடம்பெறுகின்றன. 2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள வருடாந்த மகோற்சவ காலத்தில் இந்த மலர் தொடர்பான அறிமுக விழா கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகள் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகிறேன். அத்துடன் இந்த கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன்தான் இவற்றை எல்லாம் தொடர்ந்து எழுதமுடிகிறது என்பதை என்னால் நன்கு உணர முடிகிறது. எல்லாம் சந்நிதியானின் பெருங்கருணை.

இந்நூலிற்கான அணிந்துரையை குமாரசாமி ஐயர் அவர்கள் பக்திச்சுவை ததும்ப அருமையாக எழுதியுள்ளார்கள். அவர் தனது சிறுவயதிலிருந்து சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்து வந்தது மட்டுமன்றி சந்நிதியானுக்கு தன்னை முழுமையாக அடிமையாக்கிக் கொண்ட முருக பக்தன். மிக நீண்ட காலமாக யாழ் மாவட்டம் முழுவதும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை மேற்கொண்டு வருகின்ற இறை தொண்டு செய்யும் உள்ளம் படைத்தவர். இதேபோன்று இந்நூலிற்கு ஆசியுரை வழங்கியுள்ள பொன். புவனேந்திரன் ஐயர் அவர்கள் சித்தர் மருதர் கதிர்காமர் மரபு வழிவந்தவர். சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்டு தற்பொழுது கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரதம போசகராக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். இதனால் கனடாவால் தமிழ் மக்கள் சந்நிதியானின் திருவருளை அங்கிருந்தே பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஆம் இந்த நூலிற்கான ஆசியுரை, அணிந்துரை என்பவற்றை வழங்கியுள்ள இருவரும் சந்நிதியானின் அருளாசிக்கு ஆட்பட்ட அருளாளர்கள். இவர்கள் இருவருக்கும் அடியேனது உளப் பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக!

ஓம் முருகா!

**ந. அரியரத்தினம்**
தொண்டைமானாறு.
22.05.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2017 வருடாந்த மகோற்சவத்தில் வேலவன் வீதியுலா வரும் காட்சியும்
மகோற்சவ பூசகர் அ. லோகேஸ்வர ஐயர் தீபாராதனை மேற்கொள்ளும் காட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்று

மெய்யடியவர்களின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் சந்நிதியான் எப்பொழுதும் இரண்டறக் கலந்திருக்கின்றான். அத்துடன் அவர்கள் உள்ளார்ந்த விருப்பத்துடன் நிறைவேற்ற விரும்புகின்ற நேர்த்திகள் உபயங்கள் போன்றவற்றை குறைவின்றி நிறைவேற்றி முடிப்பதிலும் சந்நிதியான் எப்பொழுதும் உற்ற துணையாக உடனிருந்து செயற்பட்டு வருகின்றான். 2017 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்தில் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அடியவர் இருவருக்கு இடம்பெற்ற இவ்வாறான ஒரு நிகழ்வை இங்கே வாசகர்களுக்கு வழங்கு கின்றோம்.

அடியவரின் பெயர் திருமதி வசந்தகுமாரி தவேந்திரநாதன். சொந்த இடம் உரும்பிராய் தற்பொழுது குப்பிளான் உபதபால் நிலைய அதிபராகக் கடமைபுரிந்து வருகின்றார். இவர் நீண்ட காலமாகவே சந்நிதியானின் மெய்யடியவராக வாழ்ந்து வருகின்றார். கடந்த ஒரு சில வருடங்களாக சந்நிதியானின் வருடாந்த உற்சவகாலத்தில் சந்நிதியான் வீதி உலா வருகின்ற சந்தர்ப்பங்களில் பெண் அடியவர்கள் கற்பூரதீபம் (கற்பூரச்சட்டி) ஏந்தி வீதிவலம் வருகின்ற எண்ணிக்கை குறைவாக இருக்கிறதே என்ற ஒரு மனக்குறை இந்த அம்மையாருக்கு இருந்துவந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு சந்நிதியானின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற காலகட்டம் அது. அப்பொழுது இந்த வருடம் சந்நிதியானுக்கு கற்பூரதீபம் எடுக்க வேண்டும் என்ற ஒரு விருப்பம் இந்த அம்மையாருடைய மனதில் ஏற்பட்டுள்ளது. இதேநேரம் உற்சவ காலத்தில் ஒரு நாள் மட்டும் கற்பூரதீபம் எடுப்பது என்று இல்லாது உற்சவ நாட்கள் முழுவதும் சந்நிதியானுக்கு அந்த நேர்த்தியை நிறைவேற்றினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்ற ஒரு ஆழமான பக்தி உணர்வும் அவருக்குள் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சந்நிதியானது உற்சவகால வீதி உலாவில் பெண்கள் கற்பூர தீபங்கள் எடுப்பது குறைவாக இருக்கின்றது என்பது தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு உள்ளூர ஏற்பட்ட அந்த குறையைப் போக்குவதற்கு தான் மேற்கொள்ளுகின்ற ஒரு சிறிய பங்களிப்பாகவும் இது இருக்கும் என்ற சிந்தனையும் அவருக்குள் ஏற்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் யோசித்த பொழுது திருமதி வசந்தகுமாரியின் அகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் அடுத்தகணமே அவருக்கு கவலையும் ஏற்பட்டுள்ளது. ஆம் ஒரு நாள் என்று இல்லாது தொடர்ந்து 15 நாட்களும் இரவு உற்சவத்தில் கற்பூரதீபம் எடுப்பதனால் நடைமுறையில் தான் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்குமே என்பதான கவலைகள் அவர் கண்முன் நிழலாடின. முக்கியமாக அரசாங்க வேலையில் கடமைபுரிந்து கொண்டு இருக்கும் ஒரு பெண் என்ற வகையில் நடைமுறைப் பிரச்சனைகள் பலவற்றை தான் எதிர்கொள்ளவேண்டியிருப்பதை உணர்ந்து கொண்டார். இருந்தபோதும் முன் ஆயத்தம் அர்ப்பணிப்பு என்பவற்றினூடாக அந்த நடைமுறைப் பிரச்சனைகள் தடைகளை தன்னால் தாண்டமுடியும் என்ற ஒரு நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. ஆனால் அடுத்து அவர் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சனை 15 நாட்களும் கற்பூரதீபம் எடுப்பதனால் அதற்கு அவருடைய பொருளாதார சூழல் இடம்கொடுக்காது என்பது தொடர்பான விடயம். இது உண்மையில் அவருக்கு தீர்வு காணமுடியாத ஒரு பிரச்சனையாகவே இருந்தது.

இதனால் 2017 ஆம் ஆண்டு சந்நிதியானது வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாவதற்கு முந்திய சில நாட்கள் தான் எதிர்கொண்டுள்ள பொருளாதார தடைகளை தாண்டி எவ்வாறு தான் 15 நாட்கள் தொடர்ந்து கற்பூரதீப நேர்த்தியை மேற்கொள்வது என்ற மனச்சஞ்சலம் இவரை வாட்டிக்கொண்டே இருந்துள்ளது. தானாக விரும்பித்தான் சந்நிதியானுக்கு இந்த நேர்த்தியை நிறைவு செய்வதற்கு வசந்தகுமாரி விரும்பியிருந்தார். அவ்வாறு சந்நிதியானுக்கு அதை நிறைவேற்றி அதில் மனநிறைவு காணவேண்டும் என சிந்தித்ததும் அவர்தான். எனவே **“முருகா நீதான் எனக்கு உதவவேண்டும்”** என்று சந்நிதியானைக் கேட்பதற்கும் அவர் விரும்பவில்லை. அவ்வாறு கேட்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமற்ற வேண்டுதல் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார். ஆனாலும் தனது நேர்த்தியை நினைத்தது போல நிறைவு செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு மட்டும் அவருக்குள் மேலோங்கிக் கொண்டே இருந்தது.

திருமதி வசந்தகுமாரி தவேந்திரநாதன் அவர்கள் ஏழாலை களபாவோடை அம்மனையும் மெய்யன்புடன் வணங்கி வருகின்ற ஒரு அடியவர். அத்துடன் அந்த அம்மன் ஆலயத்தில் பூசையை மேற்கொள்ளும் அம்மன் தாயாருடனும் நெருக்கமான உறவும் இவருக்கு உண்டு. இதனால் அந்த அம்மையாருடன் இயல்பாக உரையாடிக் கொண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இவரை அறியாமலே தான் சந்நிதியானுக்கு நிறைவேற்ற விரும்பி யிருக்கின்ற நேர்த்தி பற்றி அந்த களுபாவோடை அம்மன் தாயாருக்கு தெரிவித்துள்ளார். அதே நேரம் அதில் தான் எதிர் நோக்கியுள்ள பொருளாதார சிக்கல் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்.

என்ன அதிசயம். அந்த அம்மையார் தானும் இன்று காலை தொடக்கம் இதனைப்போன்று சந்நிதியானுக்கு நேர்த்தி ஒன்றை நிறைவேற்றும் விருப்பத்துடன் இருப்பதை திருமதி வசந்தகுமாரியிடம் எடுத்துக்கூறினார்கள். ஆனால் தான் இன்னொரு வகையில் சிக்கலை எதிர்நோக்கியிருப்பதால் அந்த நேர்த்தியை தானும் செயற்படுத்த முடியாது கவலையுடன் இருப்பதையும் இவருக்கு வெளிப்படுத்தினார்கள்.

ஆம் தனக்கு கற்பூரதீபப் புகை ஒவ்வாமை வருத்தத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இதனால் தன்னால் கற்பூரதீபம் ஏந்தி நேர்த்தியை நிறைவு செய்யமுடியாதிருக்கின்ற சிக்கலான சூழ்நிலையை களுபாவோடை அம்மன் தாயார் திருமதி வசந்தகுமாரியிடம் எடுத்துக்கூறியுள்ளார். ஆனால் தற்பொழுது தன்னுடைய குறையைப் போக்க சந்நிதியான் உன்னை இங்கே அனுப்பி வைத்துள்ளதாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அற்புதத்தை அம்மன் தாயார் ஆனந்தப் பரவசத்துடன் வசந்தகுமாரியிடம் எடுத்துக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல உடனடியாகவே ஒரு பெரிய கற்பூரப் பெட்டியையும் மூவாயிரம் ரூபாய் பணத்தையும் திருமதி வசந்தகுமாரியிடம் கையளித்தார்கள். ஆம் இருவருடைய விருப்பத்தையும் இருவரும் சேர்ந்தே நிறைவேற்றுகின்ற ஒரு திருவிளையாடலை சந்நிதியான் நிகழ்த்தி விட்ட அற்புதத்தை ஆனந்த கண்ணீர் சொரிய இரண்டு அடியவர்களும் பரஸ்பரம் அங்கே தமக்கிடையே பகிர்ந்து கொண்டனர். இந்த இரண்டு மெய்யடியார்களும் இணைந்து தமது நேர்த்தியை நிறைவுசெய்து அவர்கள் மனநிறைவு அடைவதற்கு திருவருள் புரிந்ததுடன் மட்டும் சந்நிதியான் திருவிளையாடல் நின்றுவிடவில்லை.



(திருமதி வசந்தகுமாரி கற்பூர தீபம் ஏந்திவரும் பக்திபூர்வமான காட்சி)

2017ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் களுபாவோடை அம்மன் தாயாரும் திருமதி வசந்தகுமாரியும் எதனையும் வேண்டுதலாக நினைத்து இந்த நேர்த்தியை மேற்கொள்ளவில்லை. ஆண்டவனை அழகுபார்த்து ஆண்டவனது உற்சவ கால செயற்பாடுகள் போன்றவற்றை அழகுறச் செய்து அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிறைவு அடைவதே இவர்களின் இயல்புகளாக இருந்து வருகிறது. இராமகிருஷ்ண பரம கம்சரும் காளி அம்மனுக்கு பூசை செய்த காலங்களில் இவ்வாறு காளி அம்மனை அலங்காரம் செய்து ஆராதித்து பரவசமடைந்து வந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

சந்நிதியானது மெய்யடியவர்களான இவர்கள் இருவரும் தமது நேர்த்திகளை செயற்படுத்திய நேரத்தில் இவர்கள் சந்நிதியானிடம் எந்த வேண்டுதல்களையும் செய்யாவிட்டாலும் அந்த நேரத்தில் இவர்களது உள்ளங்களில் என்னென்ன குறைகள் இருந்தனவோ அந்த குறைகளை எல்லாம் அவர்கள் கேட்காமலே சந்நிதியான் போக்கி அவர்களை பரவசமடையச் செய்கின்ற அற்புதங்களும் அங்கே அரங்கேறியுள்ளன. ஆம் களுபாவோடை அம்மன் தாயாருக்கு அதுவரை அவர் எதிர்நோக்கி வந்த அந்த ஒவ்வாமை நோய் அதன்பின்பு முற்றாக குணமடைந்து அவர் தனது பூசைச் செயற்பாடுகளை நிறைவாக மேற்கொண்டு வருகின்றார்.

இதேபோன்று ஆதவனைக் கண்டு இருள் மறைவது போல திருமதி வசந்தகுமாரி எதிர்நோக்கியிருந்த துன்பங்களும் சந்நிதி யானது திருவருளால் எவ்வாறு மறைந்துபோனது என்பதற்கு அடுத்த கட்டுரையை வாசியுங்கள்.

ஆண்டவனின் கருணையும் ஆண்டவனின் திருவிளையாடல் களும் தினம் தினம் இந்த கலியுகத்திலும் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. சந்நிதியான் சந்நிதிதானத்தில் அவை நிறைவாகவே நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் இரண்டு

வறுமையில் பிறந்து மிக நீண்ட காலம் வறுமையுடனேயே வாழ்ந்து துன்பங்கள் துயரங்களை எதிர்நோக்குகின்ற சில மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். இதேபோல எல்லாவகையான வசதிவாய்ப்புக்களுடனும் சிறப்புக்களுடனும் வசதியாக வாழ்ந்து பின்பு மோசமான வறுமை நோய்நொடிகள் உயிர் இழப்புக்கள் என துன்பங்கள் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சில மனிதர்களையும் நாம் சந்திக்கின்றோம். இதில் இரண்டாவது வகையான துன்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருப்பவர்களில் ஒருவர்தான் இங்கே சந்நிதியான் ஒன்று கட்டுரையில் நாம் வெளிப்படுத்திய அம்மையாரான திருமதி வசந்தகுமாரி தவேந்திரநாதன்.

வெதுப்பகம் ஒன்றுக்கு உரிமையாளராக அவரது குடும்பம் இருந்துள்ளது. அத்துடன் மானிடவாழ்வு மகிழ்வாக அமைவதற்கு இவ்வுலகில் என்னென்ன செல்வங்கள் வேண்டுமோ அத்தனை செல்வங்களுடனும் செல்வச்செழிப்புடனும் அந்த குடும்பம் வாழ்ந்து வந்துள்ளது. இன்று அனைத்தையும் இழந்து பல இலட்சம் கடன் சுமையை தாங்கிக்கொண்டு வாழ்க்கையில் தீராத நோய் நொடிகளையும் எதிர்நோக்கியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமல்ல உயிர் இழப்பினையும் எதிர்கொண்டவர்களாக மனிதர்களுக்கு இப்படியும் துன்பங்கள் ஏற்படுமா என்று நாம் சிந்திக்கும் அளவுக்கு துன்பச்சுமைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனாலும் சந்நிதியானின் மெய்யடியவர்களாகவும் தர்மநெறி சார்ந்த வாழ்க்கை வாழ்பவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதேநேரம் அந்த வெதுப்பகத்தின் உரிமையாளர் என்ற நிலையில் இருந்தவர்கள் தற்பொழுது அதே வெதுப்பகத்தில் சாதாரண ஊழியர் என்ற நிலை உட்பட நேர்மையான பாதையில் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுபவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு துன்பங்கள், துயரங்கள் பிரச்சனைகளுடன் குடும்பத் தலைவனையும் இழந்து தத்தளிக்கும் குடும்பமாக இந்த குடும்பம் காணப்படுகிறது. இருந்தபோதும் சந்நிதியானிடம் எந்த வேண்டுதல்களோ கோரிக்கைகளோ வைக்காது சந்நிதியானை உள்ளம் உருகி வழிபடுகின்ற மெய்யடியவராகவே திருமதி வசந்தகுமாரி அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. அதுமட்டுமல்ல சந்நிதியானுடைய வருடாந்த மகோற்சவ காலத்தில் நிறைய பெண் அடியவர்கள் கற்பூரதீபம் எடுத்து எம்பெருமானுடன் வீதிவலம் வரும் பொழுது அங்கே பக்திச் சூழல் பிரகாசமாக இருக்கும் என்ற தூய்மையான சிந்தனையுள்ளவராகவும் அவர் விளங்கியுள்ளார். அதன் ஒரு அங்கமாகத்தான் 2017 ஆம் ஆண்டு உற்சவ நாட்கள் முழுவதும் கற்பூரதீபம் ஏந்தி சந்நிதியானுடன் வீதிவலம் வருகின்ற அந்த பக்திபூர்பமான செயற்பாட்டை அந்த அம்மையார் மேற்கொண்டார்கள்.

இதே போல 2017 ஆம் ஆண்டு உற்சவ நாட்கள் முழுவதும் சந்நிதியான் வீதி உலாவரும் சந்தர்ப்பங்களில் கைதடிச்சாமிகளும் மற்றவர்களுக்கு மயிர்கூச்செறியும் வகையில் வழமைபோல பல்வேறு பக்திபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். அது மட்டுமல்லமால் அங்கே இடம்பெறுகின்ற மேளதாளங்களுக்கு ஏற்ற அபிநயம் ஆட்டம் என்பவற்றையும் வெளிப்படுத்தி யிருந்தார்கள். எமது பண்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய எமது சமயப் பாரம்பரியத்தின் வழிவந்து இந்த அபிநய ஆட்டம் அங்கே வீதிஉலாவில் பிரசன்னமாயிருந்த அனைத்து அடியவர்களின் கவனங்களையும் ஈர்ப்பதாய் அமைந்திருந்தது. இவ்வாறு கைதடிச்சுவாமியார் ஏனைய அடியவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் பக்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள். அதேநேரம் தினமும் இரவு உற்சவத்தில் கற்பூரதீபம் எடுத்து வீதி உலாவந்து கொண்டிருந்த வசந்தகுமாரி என்ற அந்த அம்மையாரின் பக்தி உணர்வையும் கைதடி சுவாமிகள் கவனமாக கவனிக்க தவறவில்லை. அடியேன் இங்கே குறிப்பிடுகின்ற இந்த இரண்டு அடியவர்களது உற்சவ கால பக்தி ததும்பும் செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி தொலைக்காட்சி போன்றவற்றில் நீங்களும் அவதானித்திருக்க முடியும்.

உற்சவம் நிறைவடைந்து நீண்ட நாட்கள் சென்றுவிட்டன. ஒரு நாள் கைதடிச்சாமிகள் உற்சவ காலத்தில் தினமும் கற்பூர தீபம் எடுத்த அம்மையாரான திருமதி வசந்தகுமாரி அவர்களை ஆலயவீதியில் காணநேர்ந்துள்ளது. அவ்வாறு கண்டவுடன் ***''உங்கள் துன்பங்கள் எல்லாம் குறைவடையும் உங்களுக்கு தீமை செய்யும் வகையாகச் செயற்பட்டவர் நாசமாகப் போவான்''*** என ஆவேசமாக அருள்வாக்கு ஒன்றை கூறியுள்ளார். என்ன அற்புதம் கைதடிச்சாமிகள் அவரை அறியாது அவரது உள்ளுணர்பு தூண்ட சந்நிதியான் ஆலயவீதியில் ஆவேசமாகக் கூறிய அந்த அருள்வாக்கு அப்படியே நடந்தேறியுள்ளது. ஆம் இந்த குடும்பத்திற்கு தீங்கு செய்தவர் என்று இவர்கள் நம்புகின்ற அந்த நபர் கைதடிச் சுவாமிகள் குறிப்பிட்டது போல முழுமையாக நாசமடைந்து போய்விட்டார். அதுமட்டுமல்லாமல் இந்த குடும்பம் எதிர்நோக்கியிருந்த துன்பங்கள் துயரங்களிலிருந்து படிப்படியாக இவர்கள் மீளுகின்ற நிகழ்வுகளும் நடைபெற ஆரம்பித்துள்ளன.



(2017 வருடாந்த உற்சவத்தின் வீதியுலாவில் கைதடிச்சாமிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.03.2018 வெள்ளிக்கிழமை மதியநேர பூசையின் பொழுது ஆலயவீதியில் அடியேன் கைதடிச்சுவாமிகளுடன் இயல்பாக உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே சுவாமிகளை நாடி திருமதி வசந்தகுமாரி அங்கே வந்து சேர்ந்தார். அவ்வாறு வந்தவர் தன்னை சாமிகளுக்கு அறிமுகம் செய்துகொண்டார். அத்துடன் சாமிகள் கூறிய அருள்வாக்கு அப்படியே நிறைவேறி விட்டதாக நன்றி உணர்வுடனும் பயபக்தியுடனும் கைதடிச்சாமி களுக்கு எடுத்துக் கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில்தான் இதற்கு முன்பு அறிமுகமில்லாத அந்த அம்மையாருடன் அடியேனும் உரையாடுவதற்கான சந்தர்ப்பம் தற்செயலாகக் கிடைத்தது.

சந்நிதியானை மெய்யன்புடன் உள்ளம் உருகி வழிபடுவது தான் முக்கியமானது. உண்மையில் வேண்டுதல்கள் அவசியமற்றவை. அவ்வாறு வேண்டுதல்கள் இன்றி வழிபடுவோருக்கு வேண்டியவை வேண்டியபொழுது கிடைப்பதற்கு கைகூடுவதுதான் இறையருள். அதுமட்டுமல்ல இறைவன் மீது நாம் மேற்கொள்கின்ற நேர்த்திகள் உபயங்கள் போன்ற செயற்பாடுகள் எல்லாம் எமக்கு எப்பொழுதும் உற்ற துணையாக இருந்து உதவும் கைங்காரியங்களாகவும் உள்ளன. இறை ஈடுபாடுள்ள திருமதி வசந்தகுமாரியின் வாழ்வியல் பாடம் இவற்றையே எம் அனைவருக்கும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இதேபோல் சித்தர்கள் ஞானிகள் உலாவந்த இடம்தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழல் என்பது நாம் எப்பொழுதோ கேள்விப்பட்ட விடயம் மட்டுமல்ல இப்பொழுதும் இவ்வாறான சித்தர்கள் ஞானிகள் இங்கே உலாவிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இதனை இன்றும் அடியவர்கள் கண்கூடாகவே காணமுடிகிறது. இதேபோன்று அவர்கள் கூறும் அருள்வாக்குகளும் எப்பொழுதும் பொய்யாவதில்லை என்பதும் இன்றும் நடந்து கொண்டிருக்கும விடயங்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் மூன்று

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல்தோறும் வேதனை இருக்கும்... என்ற தத்துவப் பாடல் வரிகளை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அங்கே வாழ்வியல் என்பது வேதனைகள் நிறைந்தவை என்பது மறைமுகமாக அழுத்திக் காட்டப்படுவதுடன் அது ஒவ்வொரு மனிதனுக்கும் பொதுவானவை என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது. படிப்பறிவற்ற பாமர மக்களும், புரிந்து கொள்ளக்கூடிய புரிந்துகொள்ள வேண்டிய தத்துவப் பாடலாக நாம் இதனை கருதமுடியும். இந்த துன்பங்கள் வேதனைகளி லிருந்து விடுபடுவதற்கு மனிதன் காலம் காலமாக முயற்சிகள் மேற்கொண்டுதான் வருகின்றான். மனிதன் புற மயமான வாழ்வியலை மட்டும் சிந்திக்காது அகமயமான வாழ்வில் அதாவது ஆன்மிக வாழ்வில் கூடிய சிந்தனையை செலுத்த வேண்டியது அவசியம் என்பது இவ்வாறான முயற்சிகள் மூலம் கண்டறிந்த ஒரு வழியாக உள்ளது.

துன்பங்கள், துயரங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை என்ற யதார்த்தத்தை ஒருவன் உணர்ந்துகொள்வதே இந்த துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கான முதல் முக்கியமான படியாக அமைந்து விடுகிறது. அத்துடன் இந்த துன்பங்கள் துயரங்களை ஆன்மிகம் என்ற பாதையூடாக தாண்ட முயற்சிக்கும்பொழுது அவன் சரியான பாதையை தெரிவுசெய்துவிட்ட நிலைக்கு வந்துவிடுகிறான். எமக்கு வழிகாட்டுவதற்காக தோன்றிய அருளாளர்களும் இதனையே எமக்கு கூறிச் சென்றுள்ளனர். இது பொதுவான உண்மை மட்டுமல்ல எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பதை தமது பட்டறிவின்மூலம் எமது மூதாதையர்களும் இதனை எமக்கு வாழ்ந்து காட்டிவிட்டு சென்றுள்ளனர். அதுமட்டுமல்ல மருதர் கதிர்காமர் மரபில் வந்து இன்றும் இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கும் பட்டறிவுள்ள அம்மணி ஒருவரும் இதற்கு இன்னோர் எடுத்துக்காட்டாக எமது கண்முன்னே வாழ்ந்து கொண்டிருப்பதையும் நாம் காணலாம். அண்மையில் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வையும் அந்த நிகழ்வு தொடர்பாக அந்த அம்மையார் அடியேனுடன் பகிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட உணர்வலைகளையும் இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2017 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவம் எல்லாவகையான சிறப்புகளுடனும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பத்தாம் நாள் மாலை உற்சவத்தில் அன்றும் வழமைபோல அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கண்டம்மா என அழைக்கப்படும் திருமதி சச்சிதானந்தம் தயானந்தா அவர்கள் இந்த அபிஷேக செயற்பாட்டை கண்குளிரக் கண்டு அகமகிழ்ந்து சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வழமைபோல அபிஷேகச் செயற்பாடுகள் நிறைவடைந்து உற்சவத்திற்குரிய பூசைச் செயற்பாடுகளுக்குரிய ஆயத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சில நிமிட இடைவெளிக்குள் மாலை உற்சவத்திற்குரிய பூசை ஆரம்பமாகி விடும். அந்த சில நிமிட இடைவெளிக்குள் பக்கத்து அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த ஐயர் அம்மாவை சந்திப்பதற்காக ஒரு சில மீற்றர் இடைவெளியில் இருந்த அந்த அறையை நோக்கி கண்டம்மா நடந்து செல்கின்றார்.

கண்டம்மா ஆலய உரிமையாளரும் உற்சவகால பிரதம பூசகருமாகிய பொன். புவனேந்திரன் ஐயருடைய சிறிய தாயார். பிரதம பூசகர் பொன். புவனேந்திரன் ஐயர் குடும்பம் குடியிருக்கும் கட்டிடத்தில் அவர்களுக்கு அருகாமையில் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். 80 வயதைத் தாண்டிவிட்ட இந்த அம்மையார் புவனேந்திரன் ஐயர் குடும்பத்தவரின் கண்காணிப்பிலேயே வாழ்ந்து வருகின்றார். இந்த வருடம் கொடியேற்ற உற்சவத்தின் பின்பு இன்று இந்த பூங்காவன நாள் இரவு உற்சவத்திற்கு இரண்டாம் நாளாக சந்நிதியானை கண்குளிரக் கண்டு வழிபடுவதற்காக வந்திருக்கிறார். அத்துடன் இன்று ஆலயத்திற்கு வருவதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது. 12ம் நாள் உற்சவத்திற்கு வருடாவருடம் தனது பங்களிப்பாக வழங்கிவரும் காணிக்கையான அந்த குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஆலயத்தில் வைத்து அதனை கையளிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு 12ம் நாள் உற்சவத்திற்காக வழங்கவந்த காணிக்கை பணத்தை கண்டம்மா அபிஷேகம் முடிவடைந்து உற்சவப்பூசை ஆரம்பமாக உள்ள அந்த சிலநிமிட நேர இடை வெளியில் ஐயர் அம்மாவிடம் கையளிப்பதே பொருத்தமானதென யோசிக்கிறார். அவ்வாறு யோசித்த அந்த காணிக்கை பணத்தை கண்டம்மா கையளிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொழுதுதான் ஆலயத்திற்குள் அந்த அசம்பாவிதம் அரங்கேறியது. (ஆலய மண்டபத்திற்கு மிக அருகாமையில் இருந்த அந்த சிறிய அறையில் தான் ஐயர் அம்மா அப்பொழுது இருந்தார்கள்) இப்பொழுது கண்டம்மா ஒரு கையில் வைத்திருக்கும் அந்த ஊன்றுகோலின் உதவியுடன் மெதுவாக நடந்துசென்று ஐயர் அம்மா இருந்த அறையைத் தட்டுகின்றார். அவ்பொழுது ஐயர் அம்மா கதவைத் திறந்து வெளியே வர முயற்சிக்கின்றார். அதற்கு வசதியாக கண்டம்மாவும் தனது காலை ஒரு அடி பிற்பக்கமாக எடுத்து வைக்க முயற்சிக்கின்றார். என்ன பரிதாபம் அந்த ஒருசில விநாடிப் பொழுதுக்குள் கண்டம்மா நிலைதடுமாறுகின்றார். நிலை தடுமாறி தடார் என்ற சத்தத்துடன் கண்டம்மா பின்பக்கமாக நிலத்தில் விழுகின்ற அந்த துன்பியல் நிகழ்வு அங்கே அரங்கேறுகின்றது.

கண்டம்மாவின் உச்சந்தலையில் பெரிய காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்து வருகின்றது. அதேநேரம் அங்கே உற்சவத்திற் குரிய பூசை ஆரம்பிப்பதற்கு நேரம் சரியாகிவிட்டது. இதனால் பூசகர்கள் அடியார்கள் என எல்லோருமே அங்கே பதட்டமும் குழப்பமும் அடைகின்றனர். உற்சவ கால பிரதம பூசகருடன் உடன்நின்று பூசைச் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த அவரது மகன் செந்தூரன் ஐயாவும், மற்றும் மகள் வாசுகியும் கண்டம்மாவை அருகில் உள்ள ஆஸ்பத்திரியின் அவசர பிரிவிற்கு கொண்டு செல்கின்றனர். அதேநேரம் பூசை தடையின்றி தொடர வேண்டுமென்பதற்காக அங்கே செந்தூரன் ஐயா ஆஸ்பத்திரிக்கு செல்வதற்கு முன்பு தனது உருத்திராக்கம் மாலை மற்றும் அணிகலன்களை கழட்டி அங்கே நின்ற சறோஸ்குமரன் ஐயாவிடம் வழங்கி தனக்கு பதிலாக பூசைச் செயற்பாடுகளில் ஈடுபடுமாறும் கூறிச்செல்கின்றார். ஆம் செந்தூரன் ஐயாவிற்கு பிரதியீடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் ஐயா செயற்பட அங்கே உடனடியாகவே பூசைச் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. அடியார்களும் பதட்டம் தணிந்து பூசைச் செயற்பாட்டில் பங்குபற்றிக் கொள்கின்றனர். ஆம் அசம்பாவிதம் நடந்தாலும் ஆண்டவன் சந்நிதியில் சந்நிதியானின் பூசைச் செயற்பாடுகள் எந்தவித தடைகளோ தாமதங்களோ இன்றி நிறைவேறிவிட்டன.



(கண்டம்மா காயப்பட்ட நிலையில் அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ற புவனேந்திரன் ஐயரின் மகன் செந்தூரன் ஐயாவும் அவரது சகோதரியும்)

அதேநேரம் அங்கே ஆஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு கண்டம்மா உடனடியாக அனுமதிக்கப்படு கின்றார். இரத்தம் வெளியேறுவது உடனடியாகக் கட்டுப் படுத்தப்படுகிறது. உச்சந்தலையில் எட்டு இளைகள் போடப்பட்டு முழுமையான கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படுகின்றார். அதிஷ்ட வசமாக அவருக்கு வேறு எந்தவித பிரச்சனைகளும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. ஏறத்தாழ எட்டு மணித்தியாலங்களுக்கு பின்பு அவர் வீடு செல்வதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது. ஆம் தலையுடன் போவது தலைப்பாகையுடன்



289488
14040CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது என்று சொல்வது போல பூசைச் செயற்பாடுகளும் சரி கண்டம்மாவின் சிகிச்சை செயற்பாடுகளும் சரி எல்லாமே எல்லோரும் எதிர்பார்த்ததைவிட சுமுகமாகவும் தாமதங்கள் இன்றியும் திருப்தியாகவும் நிறைவேறிவிட்டன.

இந்த சம்பவம் நடைபெற்று ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு பின்பு அடியேன் 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தொலைபேசியில் தொடர்புகொண்டு கண்டம்மாவுடன் வழமைபோல உரையாடினேன். அம்மையார் அடியேனுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவர். அத்துடன் தாயகத்தில் மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்து பிள்ளைகள் சிலருக்கு மாதாமாதம் உதவுகின்ற ஒரு உதவித் திட்டத்திற்கும் மனமுவந்து பங்களிப்பு செய்துவரும் தருமசிந்தனை படைத்தவர். இவ்வாறான தொடர்புகளும் அறிமுகமும் இருப்பதால்தான் அன்றும் அவருடன் வழமைபோல உரையாட தொடர்புகொண்டேன். அதேநேரம் அவரது விபத்துக்கு பின்பு அவரை நான் நேரே சந்தித்திருந்தாலும் திரும்பவும் இன்னொரு முறை அவரது உடல்நிலை பற்றியும் உளநிலை பற்றியும் அவரிடம் ஆறுதலாக விசாரித்து ஆறுதல் கூறுவதும் எனது நோக்கமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் கண்டம்மா தனது உணர்வுகளை மனந்திறந்து அடியேனிடம் வெளிப்படுத்தினார்கள்.

**''ஆலயத்திற்கு வழிபடச் சென்ற உங்களுக்கு இப்படி நடந்துவிட்டதே''** என்று ஆண்டவன் மீது பழிபோடுவது போல சிலர் தமது அறியாமை காரணமாக தமது உணர்வுகளை அவரிடம் வெளியிட்டது பற்றியும் கண்டம்மா அடியேனுக்கு அப்பொழுது குறிப்பிட்டார்கள். அவ்வாறு குறிப்பிட்டவர் உண்மையில் துன்பங்கள் துயரங்கள் நிறைந்த இந்த உலகில் இறைவனது கருணையினால்தான் நாம் சிறிதளவேனும் அவற்றிலிருந்து விடுபட்டு ஓரளவேனும் நிம்மதியாக வாழ்கின்றோம் என்ற யதார்த்தத்தை பலர் இந்த உலகில் உணர்ந்துகொள்ளவில்லை என்று எடுத்துக்கூறினார்கள். அது மட்டுமல்ல மருதர் கதிர்காமர் மரபில் வந்த அந்த அம்மையார் கருணைத் தெய்வமான சந்நிதியான் காக்கும் கடவுளாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை எல்லாம் எவ்வாறு காத்து வருகின்றான் என்பதை மனம் திறந்து அடியேனிடம் பகிர்ந்துகொண்டார்கள். மருதர் கதிர்காமர் மரபில்வந்த அந்த அம்மையார் அடியேனுடன் பகிர்ந்துகொண்ட அந்த அற்புதமான உணர்வுகளை இங்கே அடியார்களுக்கும் அப்படியே வழங்குகின்றோம்.

நாங்கள் எத்தனையோ பிறப்புக்களில் செய்த புண்ணியத்தினால் தான் இப் பிறப்பில் சந்நிதியானது ஆலயச் சூழலில் மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்து பிறந்துள்ளோம் என தமது பிறப்பையே பூர்வபுண்ணியத் தொடர்புள்ளதாகக் அந்த அம்மையார் குறிப்பிடுகின்றார். தமக்கு பதினேழு பதினெட்டு வயது வரும் வரைக்கும் நாம் உலகத்தில் கடவுளாக சந்நிதியானைத்தான் நாளும் பொழுதும் நினைத்து வழிபட்டு வந்துள்ளோம். வேறு ஆலயங்கள், வேறு தெய்வங்கள் என்று அடுத்த வட்டத்தில் நாம் போக ஆரம்பித்ததே அந்த குறிப்பிட்ட வயதிற்குப் பின்புதான் சிறுமியாக விளக்கு எடுத்தல், அன்றாட பூசை செயற்பாடுகளுக்கு முன் ஆயத்தப்படுத்த வேண்டிய பூசைப் பொருட்கள், நைவேத்தியப் பொருட்களை வீட்டில் முன் ஆயத்தம் செய்தல், உற்சவ காலங்களில் பூசைக் காலங்களில் ஆலயத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகளை ஆலயத்தில் செய்தல், ஆலயத் தொண்டுகள் என எமது நாளும் பொழுதும் சந்நிதி யானது ஆலயத்துடனேயே சென்றுகொண்டிருக்கும். இப் பிறவியில் இன்றுவரை எமது சிந்தனை செயற்பாடு என்பவற்றை எல்லாம் சந்நிதியானிடம் இருந்து நாம் பிரித்து பார்க்கமுடியாதுள்ளது.

அன்றாடம் நடந்தேறுகின்ற சம்பவங்கள் தொடக்கம் எமது வாழ்க்கைப் பாதையில் இடம்பெறுகின்ற முக்கியமான நிகழ்வுகள் வரை அனைத்தும் சந்நிதியான் கருணையுடனேயே நடைபெறு கின்றன என்ற நம்பிக்கையுடனேயே நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம் எனக் குறிப்பிட்டார்கள். தனக்கு அன்று ஆலயத்தில் நடைபெற்ற அந்த விபத்தும் இவ்வாறுதான் நடைபெற்றது என்று தான் முழுமையாக நம்புவதாக எடுத்துக் கூறினார். ஆம் ஆலயத்தில் அன்று நடைபெற்ற அந்த விபத்தினையே தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றுவதற்காக சந்நிதியான் நடாத்திய ஒரு கைங்கரியம் என்பதை பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றார்.

தனக்கு நடைபெற்ற அந்த விபத்து அங்கே அந்த இடத்தில் (ஆலயத்தில்) இடம்பெறாமல் வேறு எங்கு இடம்பெற்றிருந்தாலும் தன்னை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுகின்ற செயற்பாடு நடந்திருக்கமுடியாது. உதாரணமாக நான் தனியாக குடியிருக்கும் வீட்டிற்குள் நடந்திருந்தால் அதேநேரம் அறிவும் மயங்கியிருந்தால் நடந்த விபத்தே யாருக்கும் தெரியாமலே போயிருக்கும். அதனால் முடிவுகள் வேறு விதமாகவும் அமைந் திருக்கக்கூடும்.



(2018 மார்ச் மாதம் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை தரிசிக்கவந்த சந்தர்ப்பத்தில் ஆலய முன்றலில் கண்டம்மா தோன்றும் காட்சி)

தனக்கு விபத்து நடந்தது ஆலயம் என்று கூறினாலும் ஆலய மண்டபத்திற்குள் அது நடைபெறவில்லை. அதேநேரம் தான் பின்பக்கமாக பிடரி அடிபட விழுந்த இடத்தில் நிலத்தில் ஒரு நிலமிதிப்பு இருந்தது. அதனால் தலைக்கு ஏற்பட்ட தாக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவும் அதிகம் இல்லாமல் பாதுகாக்கப்பட்டுள்ளேன். வீட்டில் என்றால் குளியலறை, குசினி, மண்டபம் என எங்கே நான் விழுந்திருந்தாலும் நிலமை மிக மோசமானதாகவே இருந்திருக்கும்.

நான் சந்நிதியானை வணங்குவதற்காக சந்நிதியானிடம் சென்றேன். அத்துடன் வருடாவருடம் உற்சவத்திற்கு நான் செய்து வருகின்ற ஒரு சிறிய பங்களிப்பை வழங்கி எனது நேர்த்தியை நிறைவேற்றுவதும் எனது நோக்கமாக இருந்தது. அது மட்டுமல்ல சந்நிதியானது ஆலயத்தில் அவனது அபிஷேகத்தை கண் குளிரக் கண்டு ஆனந்த பரவசமடைந்து அடுத்த நிமிடமே இந்த சம்பவம் அவனது சந்நிதானத்திலேயே அங்கே நடைபெற்றுள்ளது. ஆகவே இங்கே பொறுப்பு என்னுடையது அல்ல. பொறுப்பு சந்நிதியா னுடையது. என்னைக் காப்பாற்ற வேண்டியது சந்நிதியானுடைய கடமை. ஆம் சந்நிதியானுக்கும் தனக்குமுள்ள அந்த இறுக்கமான தொடர்பை மானிட நிலையில் வைத்து அந்த அம்மையார் உரிமையுடன் அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

எனக்கு இவ்வாறானதொரு விபத்து நடக்கவேண்டியது ஒரு நியதியாக இருந்துள்ளது. யாமிருக்க பயம் ஏன் என்று அபய மளிக்கின்ற கருணைத் தெய்வமான சந்நிதியான் தானே பொறுப்பெடுத்து அடியேனை தனது இடத்திற்கே வரவழைத்து கருணை செய்து என்னை காப்பாற்றியுள்ளார். என்னை நம்பி நான் வாழவில்லை அவனை நம்பித்தான் நான் வாழுகின்றேன். மானிட வாழ்விற்குரிய இன்ப துன்பங்களை அனுபவிப்பது மானிடராகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் நாளும் பொழுதும் சந்நிதியானை நினைத்து வணங்கி வருகின்ற அடியவளை தக்க தருணங்களில் இதுபோல கருணைசெய்து காப்பாற்றி அருள்பாலித்துக் கொண்டிருப்பது நிதர்சனமான உண்மை. இவ்வாறு தனது வாழ்வியல் அனுபவத்தை மனம் திறந்து கண்டம்மா என அன்பாக அழைக்கப்படுகின்ற மருதர் கதிர்காமர் வழிவந்த அந்த அம்மையார் அடியேனிடம் தெரிவித்தார்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் நான்கு

**கதிர்காமக்கந்தனுக்கு கப்புறாளைகள் பூசை நடாத்தி வருவது போல தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுக்கு மருதர் கதிர்காமர் மரபில் வந்தவர்கள் பூசைச் செயற்பாடுகளை நடாத்தி வருகின்றனர். இது இவர்களது வரலாற்று கடமையாக இருந்து வருகிறது. இந்த வரலாற்று கடமையை மிகவும் தூய்மையாகவும் மன நிறைவுடனும் இந்த பூசகர்கள் செயற்படுத்தி வருகின்றனர். சந்நிதியானும் இதனை மிகவும் உவகையுடன் ஏற்றுக்கொள்கின்ற செயற்பாடே காலங்காலமாக இருந்துவருகிறது.** சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் தமது வரலாற்றுக் கடமையை இவர்கள் சிலவேளை புறம்தள்ள முயற்சித்தாலும் சந்நிதியான் அதனை எப்பொழுதும் ஏற்றுக்கொள்வதில்லை. பலாலி இராணுவ முகாமின் எல்லைப் பகுதியாக இருக்கும் சந்நிதிச் சூழலில் 1986ஆம் ஆண்டு மிக மோசமான நெருக்கடிகள் ஏற்படுகின்றன. பூசகர்களது உடமைகள், மடங்கள் அழிக்கப்படுகின்றன. ஆலயத்திற்கும் பாரிய சேதங்கள் ஏற்படுகின்றன. வரலாற்றில் முதல்முறையாக பூசைச் செயற்பாடு களும் தடைப்படுகின்றன. இங்கே வாழமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆலயச் சூழலில் வாழ்ந்தவர்களில் சிலர் உள்நாட்டில் வேறு பிரதேசங்களுக்கும் வேறுசிலர் கடல்கடந்து வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து செல்கின்றனர்.

அப்பொழுது ஆ. சிவசண்முக ஐயரும் வெளிநாடு செல்வதற் காக எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்து முடிக்கின்றார். ஏஜென்சியின் அழைப்பை ஏற்று வெளிநாடு புறப்படுவதற்கு எல்லா வகையான ஆயத்தங்களுடனும் இந்தியா செல்கின்றார். இந்தியாவில் விமானப் பயணம் ஒரு சில நாட்களுக்குள் சரி வந்துவிடும் என்பது உறுதி செய்யப்படுகிறது. அதனை எதிர் நோக்கி அங்கே நிற்கின்றார். அப்பொழுது சந்நிதியான் கனவுகள் காட்சிகள் மூலம் வெளிப்பட்டு **''நீ எனக்குரிய பூசகர், என்னை விட்டு நீ வெளிநாடு செல்வது முறையா? உடனே நீ என்னிடம் திரும்பி வா''** என அருள் கட்டளை இடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் வெளிப்படுத்திய அருள்கட்டளையால் ஆ.சிவசண்முகம் ஐயர் தனது தவறினை உணர்கின்றார். தந்தைக்கு ஒரே வாரிசான சிவசண்முகம் ஐயா சந்நிதியானின் திருவுள்ளத்தை பூரணமாகப் புரிந்துகொள்கின்றார். இவ்வாறு புரிந்துகொண்ட நிலையில் எதைப் பற்றியும் யோசிக்காமல் அந்த பிரச்சனையான சூழலிலும் நாடு திரும்புகின்றார். இலங்கை திரும்பிய நிலையிலும் வடமராட்சிக்குள் பிரவேசிப்பதற்கு தடைகள், நெருக்கடிகள் காணப்படுகின்றன. அவற்றை எல்லாம் தாண்டி சந்நிதியானிடம் வந்து சேருகின்றார். அவர்தான் இன்று சக பூசகர்களாலும் அடியார்களாலும் நன்கு மதிக்கப்படுகின்ற தம்பி ஐயா அவர்கள். பிரதம பூசகர் என்ற செயற்பாட்டுடன் கந்தபுராணப் படிப்பை தலைமைப் பொறுப்பில் இருந்து செயற்படுத்திவருதல், திருப்பணிச்சபை தலைவராக தொடர்ந்து செயற்படுதல் என அனைத்து ஆலயச் செயற்பாடு களிலும் நிறைவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆம் அன்று சந்நிதியானால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர்தான் இன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை இன்று அலங்கரித்துக் கொண்டிருக் கின்ற ஒரு அருளாளராக அனைவராலும் மதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இதேபோன்று ஒரு இளம் பூசகருக்கு கனடா ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற ஒரு அற்புதமான சம்பவத்தையும் அடியார்களுக்கு இங்கே வழங்குகின்றோம். கனடா ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஆலய உரிமையாளர் பொன். புவனேந்திரன் ஐயருடன் அவருக்கு இணையாக பிரதம பூசகராக செயற்பட்டுக் கொண்டிருப்பவர் ஞானம் ஐயா என அழைக்கப்படும் ஞானசேகரம் ஐயா. இவருடைய ஏக புதல்வன் ஞா. சறோஸ்குமரன் ஐயா. இவர் குமரன் ஐயா என அழைக்கப்படுகிறார். மிகச் சிறுவயதி லிருந்தே புலம்பெயர்ந்து வாழ்கின்ற வாழ்க்கைச் சூழல் அமைந்த பொழுதிலும் பூசகர் குடும்பம் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து ஒழுக்கநெறிமுறைகளுடனும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

வேலை செய்தால் மட்டுமே வாழமுடியும் என்ற நியதியும் இயந்திர வாழ்க்கையும் கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் பொது இயல்பு. மேலும் ஞா. சறோஸ்குமரன் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா நாட்டில் கல்விகற்று கனடா நாட்டின் கலாச்சார சூழலில் வளர்ந்து தற்பொழுது இளம் குடும்பத்தராகி வேலை, வருமானம், இயந்திர வாழ்க்கை என வாழ்ந்து கொண்டிருப்பதை காண முடிகிறது. ஆனாலும் அடிமனதில் மருதர் கதிர்காமர் வழிவந்த பூசகர் குடும்பத்தில் பிறந்து அந்த குடும்ப சூழ்நிலையில் வளர்ந்து வருவதால் சந்நிதியானுக்கு தனது வரலாற்றுக் கடமையை செய்ய வேண்டுமென்ற பெருவிருப்பமும் அவரது அடிமனதில் இடம்பெற்றிருப்பதை காணமுடிகிறது. அது மட்டுமன்றி நிறைவான ஒரு அந்தணரிடம் முறைப்படி தீட்சை பெற்று சைவசமய நெறிமுறைகளையும் கடைப்பிடித்துவருவர். மேலும் எல்லாச் சமயங்களினூடாகவும் ஆன்மீக ரீதியான தேடலையும் ஆழமாக மேற்கொண்டு வருவதையும் அவருடன் உரையாடும் பொழுது அறியமுடிந்தது.

இவ்வாறு பல நிறைவான அம்சங்கள் இருந்தபொழுதிலும் ஆலயத்தில் ஒரு உதவிப் பூசகராக சந்நிதியானுக்கு செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமையை அவ்வப்பொழுது மேற்கொண்டு வருகின்றாரே அன்றி முழுமையாக அந்த கடமையை அவர் மேற்கொள்ளாத குறைபாடும் நீண்டகாலமாக அவரிடம் இருந்து வருவதையும் நாம் காணமுடிகிறது. தற்பொழுது 2017ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இவர் பூசை செயற்பாட்டில் பங்குபற்றாத அந்தக் குறைபாடு துலாம்பரமாக அங்கே வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காணமுடிந்தது. ஆம் நடைபெற்றுக் கொண்டிருந்த வருடாந்த உற்சவ செயற்பாடுகளில் ஒரு நாளேனும் தனது வரலாற்றுக் கடமையை ஒரு பூசகர் என்ற நிலையில் நின்று அவர் செயற்படுத்தியதை நாம் அங்கே காணமுடியவில்லை. இது ஒரு விந்தையாகவே எமக்கு தோன்றியது. அதே நேரம் ஒரு அந்நியர் போல உற்சவ காலங்களில் அவரது தாயாரை ஆலயத்திற்கு அழைத்துவருவது, சந்நிதியானை ஆனந்தமாக வழிபட்டுச் செல்லுதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை யும் நாம் அங்கே அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பகல் 30.08.2017 இல் பூங்காவன உற்சவம் நிறைவடைந்து அடியேன் வீடு திரும்பிக் கொண்டிருக்கும்பொழுது ஆலய வெளி மண்டபத்தில் சரோஸ்குமரன் ஐயாவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அடியேனும் சந்நிதியானின் மகோற்சவ செயற்பாடுகளில் அவர் ஒரு பூசகராக செயற்பட வேண்டிய வரலாற்று கடமையை அவருக்கு கதையோடு கதையாக சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதனை அவர் ஏற்றுக் கொண்டாலும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற மகோற்சவ செயற்பாடுகளில் ஒரு பூசகராக செயற்பட வேண்டுமென்ற சிந்தனையோ அறிகுறியோ அவரது அடிமனதிலிருந்து சிறிதும் வெளிப்படவில்லை என்பதையும் அடியேன் அப்பொழுது நன்கு அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இவை எல்லாம் மானிட நிலையில் நடந்தேறிக் கொண்டிருக்கின்ற சம்பவங்களாகும். ஆனால் சந்நிதியானது திருவுள்ளமோ இங்கே வேறுவிதமாக இருந்துள்ளது.



(உற்சவகால அபிஷேகச் செயற்பாட்டில் பிரதம பூசகர் பொன். புவனேந்திரன் ஐயரும் அவரது மகன் செந்தூரன் ஐயரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் சந்நிதியான் கட்டுரை மூன்றில் நாம் வெளிப்படுத்திய அந்த சம்பவம் அங்கே அரங்கேறியது. கண்டம்மாவுக்கு ஆலயத்திற்குள் விபத்து நடக்கிறது. இரத்தம் உச்சம் தலையிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கிறது. உடனே ஆஸ்பத்திரி அவசர சிகிச்சை பிரிவிற்கு அவரை எடுத்து செல்ல வேண்டும் இந்தநிலையில் உதவிப்பூசகராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த செந்தூரன் ஐயா தான் அணிந்திருந்த உருத்திராக்கம்மாலை முதலிய அனைத்து அணிகலன்களையும் கழட்டி குமரன் ஐயாவிடம் வழங்குகிறார். வழங்கிவிட்டு **"நான் நின்று செய்த வேலையை நீ செய் நான் ஆஸ்பத்திரிக்கு போகிறேன்"** என அந்த அவசர சூழ்நிலையில் ஆணையிடுவது போன்ற ஒரு கட்டளையை குமரன் ஐயாவுக்கு கூறுகிறார். குமரன் ஐயா எந்தவிதத்திலும் அதனை மறுக்கமுடியாத சூழ்நிலை. இவ்வளவு நாட்களும் அந்நியன் போல ஆலயத்தில் காணப்பட்டவர் இப்பொழுது ஒரு சில நிமிட நேர இடைவெளிக்குள் அவற்றை அணிந்து அங்கே உற்சவ கால பூசைச் செயற்பாட்டில் உதவிப் பூசகராக கடமைபுரிய ஆரம்பிக்கின்றார். ஆம் அந்த நிமிடம் வரை நேரடியாகவோ மறைமுகமாகவோ சிறிதளவேனும் பூசைச் செயற்பாடுகளில் பங்குபற்றாது விலகி நின்றவர்தான் குமரன் ஐயா. ஆனால் தற்பொழுது பிரதம பூசகருடன் உடன்நின்று முழுமையாக அங்கே பூசைச் செயற்பாடுகளில் பங்குபற்ற வைக்கும் திருவிளையாடலை சந்நிதியான் கச்சிதமாக அங்கே நிறைவேற்றிவிட்டான்.

இந்த சம்பவம் நடைபெற்று அடுத்தநாள் அடியேன் குமரன் ஐயாவுடன் இதுபற்றி மேலோட்டமாக உரையாடியிருந்தேன். இதன்பின்பு ஏறத்தாழ நான்கு மாதங்கள் கடந்து 21.11.2017 இல் இதுபற்றி சிறிது ஆழமாக மீண்டும் அவருடன் உரையாடினேன். அப்பொழுது அவர் **மனித சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் அப்பாற்பட்டது தெய்வசக்தி.** இந்த உண்மையை சந்நிதியான் தனக்கு தெட்டத்தெளிவாக உணரவைத்த சம்பவம்தான் அது என உள்ளம் உருகி எடுத்துக்கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தேர் உற்சவத்தில் பச்சை சாத்துதல் நிகழ்விற்கு முன்பு சண்முக அர்ச்சனை மேற்கொள்வதற்கான ஆயத்த நிலையில் சறோஸ்குமரன் ஐயாவும் ஏனையவர்களும்)

அதுமட்டுமல்ல இதுவரை அவர் தனது பெற்றோர் உட்பட எவருக்கும் வெளிப்படையாக வெளிப்படுத்தாத சில உணர்வு களையும் அடியேனுடன் பகிர்ந்துகொண்டார்கள் மருதர் கதிர்காமர் மரபு வழிவந்த அந்த இளம் பூசகர் உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட அந்த உன்னதமான உணர்வினை இங்கு அடியவர்களுக்கு வழங்குகின்றோம்.

**கனடா நாட்டில் வெளியில் வேலைத்தளத்திற்கு சென்று வேலை செய்யும்பொழுது நாம் உடலாலும் உள்ளத்தாலும் பலவழிகளில் எமது தூய்மையை இழக்கின்றோம். எனவே இவ்வாறு முழுமையான தூய்மை இல்லாத நிலையில் நின்று கொண்டு சந்நிதியானின் பூசைச் செயற்பாடுகளில் ஈடுபடு வதற்கு எனது உள்ளம் இடம்தரவில்லை.** ஆனால் அன்று செந்தூரன் ஐயா எனது கையை தனது கையினால் கெட்டியாகப் பிடித்து தனது கழுத்தில் இருந்து உருத்திராக்க மாலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழட்டி என்னிடம் தந்ததார். அது மட்டுமல்ல அதன்பின்பு இந்தா எனது வேட்டி சால்வை. இதையும் அணிந்துகொண்டு தாமதிக்காது உடனே சென்று நீயே எனது கடமைகளை அந்த இடத்தில் நின்று எனக்காகச் செய் என கட்டளை இடுவது போலக் கூறினார். இந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் சந்நிதியானே கூறியது போன்ற உணர்வையே எனக்கு அப்பொழுது ஏற்படுத்தியது என ஒருவித மான பதட்டத்துடனும் பக்தியுடனும் குமரன் ஐயா அடியேனிடம் எடுத்துக் கூறினார்.

ஆம் கனடா நாட்டில் மட்டுமல்ல சராசரியாக ஆலயப் பூசகர் ஒருவரிடம் நாம் எதிர்பார்ப்பதை விட உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகமிக தூய்மையான செயற்பாட்டை விரும்புகின்ற பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய ஒரு பூசகராக அவரை அப்பொழுது என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அதுவரை எள்ளளவும் பூசைச் செயற்பாடுகளில் பங்கு பற்றாது இருந்த குமரன் ஐயா இவ்வாறுதான் பூங்காவன உற்சவத்தின் இரவுப்பூசையில் உதவிப் பூசகராக செயற்பட ஆரம்பித்தார். இந்த அற்புத நிகழ்வைத் தொடர்ந்து அடுத்து வந்த நாட்கள் முழுவதும் சறோஸ்குமரன் ஐயா உற்சவகால பூசைச் செயற்பாடுகளில் அனைத்திலும் தவறாது பங்குபற்றி யிருந்ததை அடியேனும் அவதானிக்கமுடிந்தது. ஆகவே அது எப்படி சாத்தியமானது என்பது பற்றியும் அறிவதற்கு எனது உள்ளம் விரும்பியது. எனவே அது தொடர்பாகவும் அவரிடம் அன்பாக வினாவினேன். அப்பொழுது அவர் எல்லாமே சந்நிதியானின் திருவிளையாடல் என மனம் திறந்து வெளிப்படுத்தினார்கள்.

இந்தச் சம்பவத்தின் பின் அவர் தனது பூசைச் செயற்பாடு களை நிறைவேற்றுவதற்காக விடுமுறை வேண்டி வேலைத் தளத்திற்கு மின் அஞ்சல்மூலம் விண்ணப்பித்துள்ளார். வழமையாக அவ்வாறான வேண்டுதல்களை மறுக்கின்ற முகாமையாளர் அதனை வழமைக்கு மாறாக ஏற்றுக் கொண்டுள்ளார். இதேபோல அடுத்த நாள் சறோஸ்குமரன் ஐயா பூசைக்கு நேரமாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த நிலையிலும் சிறிது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்துள்ளார். அப்பொழுது அவரது ஒரு வயது மகன் அவரது முகத்தில் பலமாக தனது கையினால் பலமாக அடித்து அவரை நித்திரையால் எழுப்பியுள்ளான். விழித்துப் பார்த்த பொழுது மகன் சிரித்துக்கொண்டு இருந்துள்ளார். அப்பொழுது பூசைக்குரிய நேரம் நெருங்கிவிட்டதை இவர் உணர்ந்து கொண்டுள்ளார். பதட்டப்பட்டு எழுந்து நீராடி முறைப்படியான ஆயத்தங்களுடன் ஆலயத்திற்கு வந்துசேர்ந்துள்ளார். இவர் இங்கே வந்துசேர ஆலயத்தில் பூசைக்கு நேரம் சரியாகி விட்டதையும் கண்டு நிறைவடைந்துள்ளார். ஆம் இறுதி ஐந்து நாட்களும் எல்லா உற்சவகாலப் பூசைகளிலும் எந்த தடைகளும் இடைஞ்சல்களும் இல்லாது நிறைவாக பூசைச் செயற்பாடுகளில் பங்குபற்றி தான் முழுநிறைவடைந்ததை அடியேனிடம் எடுத்துக் கூறினார்கள்.



(சந்நிதியான் திருவிளையாடலால் பூசைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்ட பின் சறோஸ்குமரன் ஐயாவும் அவருடைய தந்தையார் ஞானசேகரம் ஐயாவும் மகிழ்வுடன் தோன்றும் காட்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! அறம்செய்ய விரும்பு என ஔவைப் பிராட்டியார் குறிப்பிட்டது போல நாம் சந்நிதியானுக்கு செய்யவேண்டிய கடமையை உளப்பூர்வமாக செய்யவிரும்புவதுதான் முக்கிய மானது. அவ்வாறான சிந்தனை எமது உள்ளத்தில் இருந்தால் போதும். அதனை நிறைவுசெய்வதற்கு சந்நிதியானின் திருவருளும் எப்பொழுதும் நிறைவாகவே எமக்குக் கிடைக்கும்.

மருதர் கதிர்காமர் வழிவந்த குமரன் ஐயாவும் தனது வரலாற்றுக் கடமையை நன்கு உணர்ந்தவராக இருந்துள்ளார். அத்துடன் பூசைச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டுமென்ற உணர்வும் அவரிடம் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருந்துள்ளது. இங்கே சந்நிதியான் அவருக்கிருந்த அகப்புற சூழல் தடைகள் சந்தேகங்களை தனது திருவிளையாடல் மூலம் அகற்றி அங்கே அவரது உணர்வுகளுக்கு செயல் வடிவம் கொடுத்து தனக்குரிய பூசகராக ஆக்கிவிட்டார்.

ஓம் முருகா!

எமது நோயை, எமது துன்பங்களை, எமது பாவங்களை தீர்க்குமாறு இறைவனிடம் சென்று மனமுருகி மன்றாடுகின்றோம். ஆனால் நோயை உருவாக்கும் இரசாயன மருந்துகள் இட்டு பழுக்கவைத்த பழவகைகளை இறைவனுக்கு சமர்ப்பித்து வழிபடுகின்றோம்.

இவ்வாறான நோயை உருவாக்கும் இந்த பழங்களை இறைவன் மனமுவந்து ஏற்றுக்கொள்வான் என நாம் எதிர்பார்ப்பது சரியா? இவற்றை உணராது நாளும்பொழுதும் இதே தவறுகளை நாம் அனைவரும் செய்து வருகின்றோம் என்பது கவலைதரும் விடயமே.

அடியார்களும் சிந்திப்போம்! வியாபாரிகளும் சிந்திக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஐந்து

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைகாசி மாதம் நடைபெறு கின்ற விசாகத் திருவிழாவின்போது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மதியநேரம் வீதி உலா வருகின்ற நிகழ்வு இடம்பெறுவது வழக்கம். பேபி அக்கா அவர்களுக்கு வீதி உலா வருகின்ற அந்த மத்தியான நேர உற்சவத்திற்கு செல்வதற்கு சில வசதிக்குறைவுகள் இருந்தமையால் சந்நிதியான் வீதி உலா வருகின்ற நேரம் தான் ஆலயத்திற்கு செல்லமுடியாத நிலைமை இருப்பதை ஏற்கனவே தனக்குள் முடிவு செய்திருந்தார்கள். ஆனாலும் உற்சவம் முடிவடைந்தாலும் சந்நிதியானை அன்று மாலை ஆலயத்திற்கு சென்று எழுந்தருளிய கோலத்தில் அவனது இருப்பிடத்திலேனும் கண்குளிரப் பார்க்க வேண்டுமென்று சிந்தித்தவாறு முதல்நாள் இரவு தனது வீட்டில் படுத்திருந்தார்கள். முழுமையான நித்திரை என்றோ முழுமையான விழிப்பு என்றோ கூறமுடியாத நிலையில் படுத்திருக்கும்பொழுது இரவு இரண்டு மணியளவில் அம்மையாருடைய பெயரைச் சொல்லி அக்கா என பூசகர் குட்டி ஐயா அழைக்கும் குரல் கேட்டது.

இவ்வாறு பூசகர் பேபி அக்கா என சின்னக்குட்டி ஐயா தமது பெயரைச் சொல்லி அக்கா என்ற அடைமொழியுடன் அழைப்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்ட மேற்படி அம்மையார் அவர்கள் தனது வீட்டு வெளிவாசலுக்குச் சென்று கதவைத் திறந்து பார்த்தார்கள். அங்கே எவரையும் காணவில்லை. அழைக்கின்ற குரல் கேட்டதும் உண்மை. ஆனால் ஆட்கள் எவரும் அங்கே இல்லை என்பதும் உண்மை. இதனை நிதானமாக அந்த அம்மையார் தனக்குள் உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இந்த உண்மைகளை அமைதியாக தனக்குள் உள்வாங்கிய அந்த அம்மையார் எதுவித சலனமுமின்றி மீண்டும் வீட்டிற்குள் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டார்கள்.

ஆம் மேற்படி சம்பவம் 2004 ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வாகும். ஸ்ரீ செல்வச்சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பிரதான வாசலான கிழக்கு வாசலில் உள்ள பிரதான வீதியில் அவருடைய வீடு அமைந்துள்ளது. இவரை பொதுவாக அக்கா என்றே அழைப்பார்கள்.

2004 ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா அனைவரும் எதிர்பார்த்தது போல சிறப்பாக முடிவடைந்துவிட்டது. நேரமும் பிற்பகல் 6.00 மணியைத் தாண்டிவிட்டது. இந்நிலையில் மேற்படி பேபி அக்கா அவர்கள் தான் சிந்தித்திருந்தது போலவே ஆலயத்திற்குள் சென்று ஆலயத்தின் உள் மண்டபத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இவருடைய வருகைக்காக காத்திருந்தவர்கள் போல அன்றைய உற்சவப் பூசையை நடாத்திய பிரதமகுரு ஆ. சிவசண்முக ஐயரும் சின்னக்குட்டி ஐயா என அழைக்கப்படும் த. அகிலேந்திரன் ஐயரும் தங்களுக்குள் ஏதோ கதைத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பிரதமகுரு சிவசண்முக ஐயர் மூலஸ்தானத்திற்குள் சென்று அன்றைய எழுந்தருளி வேலவனுக்கு சாத்தியிருந்த மாலையையும் மற்றும் திருநீறு, சந்தணம், புஸ்பங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து மேற்படி பேபிஅக்காவிடம் வழங்கினார்கள். அம்மையாருக்கு உள்ளத்தில் ஆனந்தம் கரைபுரண்டோடியது. பயபக்தியுடன் அவற்றை இரண்டு கைகளாலும் பெற்று கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். அதுமட்டுமன்றி மூலஸ்தான வாசலுக்கு மிகவும் அருகாமையில் சென்று மூலஸ்தானத்திற்குள் எழுந்தருளி வேலவன் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த அலங்கார சாத்துப்படியுடனான அழகான காட்சியை கண்குளிரக்கண்டு அகமகிழ்ந்தார்கள். அப்பா! முருகா! இந்த அடியவளையும் ஒரு பொருட்டாக நினைத்து எழுந்தருளிய கோலத்தில் உனது தரிசனத்தை எனக்கு தந்து எனது விருப்பத்தை நிறைவு செய்தாயே என ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

மேலும் முதல்நாள் இரவு இரண்டு மணிக்கு சின்னக்குட்டி ஐயாவின் குரலில் சந்நிதியான் தனது வீட்டுவாசலில் நின்று தன்னை அழைத்த திருவிளையாடல் சம்பவத்தை பிரதம குருக்களான ஆ. சிவசண்முக ஐயருக்கும் குட்டி ஐயாவுக்கும் அம்மையார் எடுத்துக்கூறினார்கள். அப்பொழுது ஆ. சிவசண்முக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் அவர்களும் இந்த பிரசாதங்களையும் எம்பெருமானுக்குச் சாத்தியிருந்த மாலையையும் உங்களுக்கு வழங்க வேண்டுமென்று தாம் ஏற்கனவே எந்தவிதமான முடிவையும் மேற்கொண்டிருக்க வில்லை. ஆனாலும் உங்களைக் கண்டபின்புதான் உங்களுக்கு அதை வழங்கவேண்டுமென எனது உள்ளுணர்வு தூண்டியத னாலுமே இதனை உங்களுக்கு வழங்கியதாகவும் கூறினார்கள். இவ்வாறு பேபி அக்காவும் பூசகர்களும் சந்நிதியானது திருவிளையாடல் தொடர்பான அனுபவங்களை தமக்கிடையில் பகிர்ந்துகொண்டதுடன் சந்நிதியானுடைய அற்புத லீலைகளை எண்ணி அகமகிழ்ந்தனர்.



குடும்ப உறவுகள் இருந்தாலும், தற்பொழுது பேபி அக்கா அவர்கள் தனது வீட்டில் தனித்து வாழ்ந்துவருகின்றார். பேபி அக்கா தான் வீட்டில் சமைக்கின்ற சில விசேட உணவுப் பண்டங்களை ஆலயச் சூழலில் இருக்கின்றவர்கள் மற்றும் ஆலயத் தொண்டுகள் செய்கின்ற தன்னுடன் நெருக்கமாகப் பழகும் சில அன்பர்கள் என பலருக்கும் அவற்றை உண்பதற்கு வழங்கி அதில் ஆனந்தம் அடைவது வழக்கம். அதேபோன்று அவ்வப்போது தான் சமைத்த உணவுப்பொருட்களை சந்நிதியானுடைய ஆற்றங்கரைக்கும் எடுத்துச்செல்வார். அங்கே ஆற்றங்கரையில் உள்ள அணைக்கட்டில் ஏறிநின்று ஆற்றில் உலாவுகின்ற மீன்களுக்கு அந்த உணவுகளைப் போட்டு அந்த மீன்கள் உண்பதைப் பார்த்து அகமகிழ்வது இவரது வழக்கமாகும்.

இவ்வாறு அனைத்து உயிர்களையும் நேசிக்கின்ற இயல்புடைய மேற்படி அம்மையார் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அன்றும் காலை 10 மணியளவில் ஆற்றங்கரைக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்களுக்கு உணவுப்பொருட்களை போட்டு அவை உண்ணுகின்ற அழகைக் கண்டு அகமகிழ்ந்தார்கள். அதன்பின் அப்படியே ஆலயத்தின் வாசலுக்கு வந்து சந்நிதியானை வழிபாடு செய்துவிட்டு தனது வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். என்ன அதிசயம் அடுத்தகணம் இவர் சற்று முன்பு மீன்களுக்கு உணவு போட்டுக் கொண்டிருந்த ஆற்றங்கரையில் 15 அடி உயரத்திற்கு மேல் சுனாமி அலைகள் பொங்கி எழுந்து ஆர்ப்பரிக்கும் அவலம் அங்கே நடந்தேறிக் கொண்டிருந்தது. உயிர்ச்சேதம் உட்பட பல்வேறு அனர்த்தங்களும் அங்கே ஏற்பட்டன. அது மட்டுமன்றி சுனாமி அலையின் வெள்ளம் இவர் வழிபட்டுக் கொண்டிருந்த ஆலயத்தின் முன்வாசல்வரை வந்து மீண்டும் வடிந்து செல்கின்ற நிகழ்வும் இடம்பெற்றது. இவ்வாறு ஒருசில நிமிட நேர இடைவெளியில் அந்த அம்மையார் ஆற்றங்கரையிலிருந்து விலகியதால் அவருக்கு ஏற்பட இருந்த அனர்த்தத்திலிருந்து அவர் காப்பற்றப்பட்ட அதிசயத்தையும் சந்நிதியான் நிகழ்த்தியுள்ளான்.



பூமாலை தொடுக்கின்ற சரியைத் தொண்டில் பேபி அக்கா ஈடுபட்டுக் கொண்டிருக்கும் காட்சி

சித்தர்களாகவும், யோகிகளாகவும், ஞானிகளாகவும் ஆண்கள் மட்டுமன்றி பல பெண்களும் சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்துள்ளார்கள். இதேபோன்று பக்தியின் உச்ச நிலையிலோ அல்லது அதற்கும் மேற்பட்ட ஞானநிலையில் இன்றும் பல பெண்கள் சந்நிதிச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் சந்நிதிச் சூழலை பூர்வீகமாகக் கொண்டவர்களாகவும் இலைமறைகாயாகவும் இவர்கள் வாழ்ந்துகொண்டு இருப்பதையும் நாம் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது சிந்தனை செயற்பாடு அனைத்தும் சந்நிதியானாகவே இருக்கும். நடப்பவை அனைத்தும் அவன் சித்தமாகவே நடக்கின்றன என்று பொதுவாக எம்மில் பலர் சொல்கின்ற விடயங்கள் இந்த அம்மையாரைப் பொறுத்தவரை ஒரு நம்பிக்கையாக மட்டுமன்றி அன்றாட வாழ்வியல் அனுபவங்களாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதை எம்மால் நன்கு உணரமுடிகின்றது.

இந்த அம்மையாரைப் போன்றவர்கள் சந்நிதியானுடன் கொண்டுள்ள உறவுமுறைக்கு எம்மால் அர்த்தம் கூறுவது மிகவும் கடிமானது. ஆனால் அம்மையாருடன் உரையாடிய பொழுது கண்ணன் என் சேவகன் என்ற பகுதியில் பாரதியார் பாடிய பின்வரும் பாடலின் வரிகளே அடியேனுக்கு ஞாபகம் வந்தது. ஆம் நண்பனாய்... மந்திரியாய்... நல்லாசிரியனுமாய்... பண்பிலே தெய்வமாய்... என்பது போல சந்நிதியானுடன் இவர்கள் கொண்டுள்ள உறவும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பல்வகைப்பட்ட வடிவங்களில் காணப்படுவதையே நாம் உணர முடிகின்றது.

ஓம் முருகா!

**ஆண்டவனின் அபிஷேகத்திற்கென எடுத்துச் செல்லும் கரும்பை சம்பிரதாயத்திற்குத் தட்டி, கசக்கி அபிஷேகத்திற்குப் புழியும்போது ஒரு துளி கரும்புச்சாறு கூட இறைவன் திருமேனியில் படாதநிலையில் நாம் அபிஷேகத் திரவியமாக கரும்பை எடுத்துச் செல்வதில் என்ன பயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆறு

2004 ஆம் ஆண்டு மாசி மாதத்தின் நடுப்பகுதியில் ஒரு நாள் காலை 10.30 மணிக்கு பேபி அக்கா அவர்கள் சந்நிதி ஆலயத்தின் கிழக்கு வீதியில் அமைந்துள்ள தனது வீட்டில் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது சின்னக்குட்டி ஐயா அவர்களின் மகன் அகிலேஸ் அங்கே வந்து சேர்ந்தான். அப்பொழுது அகிலேசுக்கு வயது பத்து. யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் தரம் 05 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். தனது வீட்டுக்கு வந்த அகிலேசிடம் அம்மையார் அவர்கள் மிகவும் அன்பான முறையில் உரையாடிவாறு தனது அலுவல்களையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த அம்மையார் அவர்கள் அகிலேசிடம் இன்று பள்ளிக்கூடம் அல்லவா? ஏன் தம்பி பாடசாலைக்குச் செல்லவில்லை என்று கேட்டார்கள். அம்மையார் வீட்டில் தங்கிநின்று சந்தோஷமாக விளையாடிப் பொழுதைப் போக்குவதற்காக வந்த அகிலேசிற்கு இது சிறிது சங்கடமாக இருந்தது. ஆனாலும் இவ்வாறான கேள்வியை ஓரளவிற்கு அவன் முன்பே ஊகித்திருக்கவேண்டும் என்பதை அவனது முகபாவனையும் பதிலும் எடுத்துக்காட்டியது. 'அப்பாதான் என்னை போகவேண்டாம் என்று மறித்தவர்' என்று மிகவும் இயல்பான முறையில் தனது பதிலை வெளிப்படுத்தினான். இது அப்பட்டமான பொய் என்பதை அம்மையார் அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால் அம்மையார் அவனது மனதை புண்படுத்த விரும்ப வில்லை. அதேநேரம் அவனை நல்வழிப்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

அம்மையார் அவர்கள் நீ பொய் சொன்னால் அது முருகப்பாவுக்கு தெரியும். முருகப்பா உன்னை கோபிப்பார். அது மட்டுமல்ல பொய் சொல்வதற்குரிய தண்டனையையும் அவர் தருவார் என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சின்னக்குட்டி ஐயா என அழைக்கப்படும் த. அகிலேந்திரன் ஐயரின் மகன் அகிலேஷ் தான் சின்னப்பிள்ளை ஆதலால் அக்கா தன்னை வெருட்டுகின்றார் என தனக்குள் முடிவு செய்துகொண்டான். அது மட்டுமல்ல அதனை வெளிப்படையாகவே அக்காவிடம் கேட்டுவிடுவதற்கும் முடிவு செய்துவிட்டான்.

''பொய் சொன்னால் அல்லது பிழை செய்தால் சின்னப் பிள்ளைகளுக்குத்தான் முருகப்பா தண்டனை தருவாரா?'' என்று தனது மனதுக்குள் தோன்றிய உணர்வலைகளை அப்படியே பேபிஅக்காவிடம் வெளிப்படுத்தினான்.

உண்மையில் இவ்வாறான ஒரு கேள்வி அகிலேசிடம் இருந்து வந்தது அக்கா அவர்களுக்கு சற்று வியப்பாகத்தான் இருந்தது. ஆனால் அக்கா அவர்கள் நிலைகுலையவில்லை.

சமூகத்தில் அநீதியும், அதர்மமும் முனைப்புப் பெற்று விளங்குகின்ற இக்காலகட்டத்தில் கூட நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டுமென்று சிந்திக்கின்ற அம்மையார் அவர்கள் மாணவன் அகிலேசினது இந்தக் கேள்வியால் நிலை தடுமாறிப் போகவில்லை. மாறாக வஞ்சகம் இல்லாத, அதேநேரம் துணிச்சலான ஒரு பிஞ்சு உள்ளத்தில் சரியான ஒரு விதையை அதாவது உண்மை பேசுதல், அறநெறியில் வாழப்பழகுதல் ஆகிய அம்சங்களை சந்நிதியானுடைய பெயராலே விதைத்து விடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இதனைக் கருதிக் கொண்டார்கள்.

மேலும் செய்யக்கூடாத பிழைகளைச் சந்நிதிச் சூழலிலே செய்தவர்களையும் அதன் காரணமாக அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள், எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் நன்கு அறிந்து தெரிந்து வைத்திருக்கின்ற ஒருவர்தான் பேபி அக்கா. எனவே அறநெறி தவறாது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அம்மையார் அகிலேசினது உள்ளத்திலே சரியான விதையை விதைப்பதற்கு


289488
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவித தயக்கமும் அடையவில்லை. அது மட்டுமல்ல அவ்வாறு செயற்படுவது தமது கடமை எனவும் முடிவு செய்தார்கள்.

இவ்வாறு தனது மனதிற்குள் சிந்தனைத் தெளிவு பெற்ற அம்மையார் அவர்கள் அகிலேசை நோக்கி *"ஆம் பெரியவர்கள் பிழை செய்தாலும் தண்டனை நிச்சயமாக அவர்களுக்கும் கிடைத்தே தீரும் என பதில் கூறினார்கள். அத்துடன் அவன் சிறுபிள்ளையாக இருப்பதனால் அவன் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தனது பதிலை விளக்கிக் கூறினார்கள். ஒவ்வொருவரும் செய்கின்ற பிழைகள் அல்லது கூறுகின்ற பொய்களுக்கு ஏற்ற மாதிரி எல்லோருக்கும் முருகப்பா தண்டனைகளையும் வழங்குவார். உங்கள் அப்பா பொய் சொன்னால் அவருக்கும் தண்டணை கிடைக்கும். உதாரணமாக போகும் வழியில் முள் குத்தலாம், தடக்கி விழலாம் அல்லது விபத்து ஏற்பட்டு இரத்தம் வரலாம். இவ்வாறான தண்டனைகளை எல்லாம் முருகப்பா நிச்சயம் வழங்குவார்" என எடுத்துக் கூறினார்கள்.*



(சனி திருமுழுக்குப் பூசையில் வைரவப்பெருமானின் பூசையைத் தொடர்ந்து சரஸ்வதி சந்நிதானத்தை நோக்கி அகிலேந்திரன் ஐயா வரும் காட்சி - 2018 மே)

மேலும் அம்மையார் அவர்கள் சிறுவன் அகிலேசைப் பார்த்து நீயும் முருகப்பாவின் பிள்ளைதானே. உனது அப்பா தான் பாடசாலைக்கு போக வேண்டாம் என்று மறித்தது என்று நீ எனக்குப் பொய் சொன்னால் முருகப்பாவுக்கு அது தெரியும். ஆகவே அவர் அதற்கேற்ற தண்டனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தருவார் எனக் கூறிக்கொண்டிருக்கும் பொழுது கேற்றுக்கு வெளியில் இருந்து அகிலேசின் தந்தை குட்டி ஐயா 'தம்பி' என்று கூப்பிடும் சத்தம் கேட்டது.



(பூசை நிறைவில் அடியார்களுக்கு பூசகர் திருநீறு வழங்கிக் கொண்டிருக்கும் காட்சி - 2018 மே)

அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு சின்னக்குட்டி ஐயா அவர்கள் அகிலேசை அழைப்பார் என்பதை இருவரும் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வது என்று இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஆனாலும் வருகின்றோம் என்று குரல் கொடுத்தபடி இருவரும் சிறிது தயக்கத்துடன் சென்று வெளிக் கதவைத் திறந்தார்கள். என்ன ஆச்சரியம் சின்னக்குட்டி ஐயாவையோ அல்லது வேறு எவரையுமே அங்கே இவர்களால் பார்க்கமுடியவில்லை.

'தம்பி' எனக் குரல் கொடுத்த தனது தந்தையை அங்கே காணமுடியாத சிறுவன் அகிலேஸ் குழப்பமடைந்து போனான். இதே குழப்பம் அம்மையார் அவர்களுக்கும் அங்கே ஏற்பட்டது. ஆனால் குட்டி ஐயா அங்கே எந்த இடத்திலும் இல்லை என்பதை நிதானமாக அம்மையார் உறுதிப்படுத்திய பொழுது அவருக்கு விளங்கிவிட்டது இது நிச்சயமாக சந்நிதியானுடைய திருவிளையாடல்தான் என்பது. இயல்பாகவே இதுபோன்ற அதிசயங்களை அடிக்கடி எதிர்நோக்குகின்ற அம்மையார் அவர்கள் ஒரு சிறுவனது மனதில் அறத்தையும் உண்மையையும் பதிய வைக்கின்ற இந்த செயற்பாட்டிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானுடைய இந்த அற்புதமான ஆசீர்வாதம் இங்கே நடந்தேறியுள்ளது என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

ஆம் சிறுவன் அகிலேசிற்கும் இப்பொழுது எங்கிருந்தோ ஒரு தெளிவு ஏற்பட்டது. முருகப் பெருமானுக்கு பொய் சொல்ல முடியாது முருகப்பாவுடன் உண்மையாகத்தான் நடந்து கொள்ளவேண்டுமென்று உணர்ந்து கொண்டான். அத்துடன் பாடசாலைக்கு தானே கள்ளம் போட்ட உண்மையை அம்மையாரிடம் ஏற்றுக்கொண்டு தான் இனிமேல் அவ்வாறு செய்யாது பாடசாலைக்கு ஒழுங்காகப் போவதாகக் கூறிக் கொண்டான். அவன் குறிப்பிட்டதுபோல தற்பொழுது விருப்பத்துடனும் ஒழுங்காகவும் பாடசாலைக்கு போவதைப் பார்த்து அம்மையார் மட்டுமல்ல அவனது பெற்றோரும் அகமகிழ்கின்றனர்.

குழந்தைகள் இறை நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையைப் பேசக் கற்றுக் கொள்வதும் அறக்கருத்துக்களுக்கு இணங்க ஒழுகப் பழகுவது என்பதெல்லாம் சாதாரண விடயங்களல்ல. அது அக்குழந்தைகளது வாழ்க்கைப் பயணத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி காணுவதற்கும், அப்பிள்ளைகள் சிறந்த ஆளுமை வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் மிகவும் துணை செய்யும் என்பதை ஆன்மீகவாதிகள் மட்டுமன்றி உளவியல் அறிஞர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அத்துடன் கல்வியில் எவ்வளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் இவ்வாறான அறமும் ஒழுக்கமும் நிறைந்த நல்விழுமியக் கருத்துக்களை மாணவர் சமுதாயத்தில் ஏற்படுத்துவதே இன்றுள்ள மிக முக்கிய தேவை என்பதை கல்வியியலாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டை ஒரு சிறுவனுக்கு அதுவும் மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்து சந்நிதியானுக்கு தொண்டு செய்யப்போகின்ற ஒரு பிள்ளைக்கு ஏற்படுத்தியது மட்டுமல்ல அந்த முயற்சி சந்நிதியானுடைய திருவிளையாடலின் உதவியுடன் நிறைவேறியதை எண்ணி அம்மையார் அவர்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.05.2018 சனிக்கிழமை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திற்குச் சென்றபொழுது அங்கே தந்தையான த. அகிலேந்திரன் ஐயர் பிரதம பூசகராகவும் தனையன் அகிலேஸ் உதவிப் பூசகராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் காட்சியை அடியேன் காணுகின்ற அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. பூசைகள் நிறைவு பெற்றபின் தந்தையாருடன் இயல்பாக உரையாடினேன்.



அப்பொழுது ஆண்டு ஐந்தில் கல்விகற்ற அகிலேஸ் தற்பொழுது இடைநிலைக் கல்வியை நிறைவுசெய்து அடுத்த நிலைக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருப்பதை அறிய முடிந்தது. அதேநேரம் அமரராகிவிட்ட பேபி அக்கா எதிர்பார்த்தது போல இன்று அகிலேஸ் தானாக உணர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். அதேபோன்று சந்நிதியானுடைய பூசைக்குரிய செயற்பாடுகளிலும் முழுமையான விசுவாசத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு உதவிப் பூசகராகவும் அங்கே அவரைக் காணமுடிகிறது. தந்தை பூசகராக வும் தனையன் உதவிப் பூசகராகவும் 12.05.2018 இல் செயற்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அதன் ஓர் அங்கமாக பூசை நிறைவில் தீர்த்தம் வழங்கிக் கொண்டிருக்கும் காட்சி.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஏழு

2004 ஆம் ஆண்டு கந்தசஷ்டி முடிவடைந்து சில நாட்கள் சென்றுவிட்டன. சந்நிதி ஆலயத்தின் மடப்பள்ளியுடன் இணைத்து அமைக்கப்பட்டிருக்கும் திருப்பணிக் காரியாலயத்தில் அந்த இளம் பெண் திருப்பணிக்காக அன்பர்கள், அடியார்கள் வழங்கும் திருப்பணி நிதியினைப் பெற்று அதற்கான பற்றுச்சீட்டுக்களை வழங்கும் தனது பணியை வழமைபோல ஆற்றிக்கொண்டிருந்தார்.

இவ்வாறு தனது வழமையான பணியை அவர் மேற்கொண்டிருந்தாலும் அவருடைய உள்ளுணர்வான சிந்தனையும் செயற்பாடும் கதிர்காமக் கந்தனிடம் செல்வது பற்றியதாகவே இருந்தது. மருதர் கதிர்காமர் வழித்தோன்றலாக வந்த சிவானந்த ஐயர் செல்வறோசா என்ற அந்தப் பெண்ணைப் பொறுத்தவரை கதிர்காமம் செல்வதென்பதும் அவர் நிறைவேற்ற வேண்டிய நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதென்பதும் சாதாரண நிலைகளையெல்லாம் கடந்த பக்தியின் உச்சகட்டமான ஒரு விடயமாகும். இவர் ஒரு அபூர்வமான எண்ண அலைகளினால் கதிர்காமக் கந்தனுடைய வழிபாட்டிற்காக துடித்துக் கொண்டிருந்தார் என்பது ஏனையவர்களால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆம் இவ்வாறு செல்வி செல்வறோசா அவர்கள் கதிர்காமம் செல்லவேண்டும் என்ற உணர்வையும் கதிர்காமக் கந்தனைச் சென்று வழிபடவேண்டும் என்ற பக்தியையும் அவரால் கட்டுப்படுத்த முடியாது ஒவ்வொரு கணப்பொழுதினையும் கதிர்காமக் கந்தனின் நினைவுடனேயே அவர் கழித்துக் கொண்டிருந்தார். இவ்வாறான ஒரு பக்தி நிலையில் அவர் மூழ்கியிருக்கும் பொழுதுதான் அவர் கடமையாற்றும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய திருப்பணிக் காரியாலயத்திற்கு அந்த சுவாமிகள் வந்து சேர்ந்தார்கள்.

அந்த சுவாமிகள் தான் கதிர்காமத்திலிருந்து வருவதாகவும் நீங்கள் வந்தால் அங்கே தான் சகல உதவிகளையும் செய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் கூறியதுடன் தான் தங்கியிருக்கின்ற கதிர்காமத்திற்குரிய விலாசத்தையும் செல்வி செல்வறோசா சிவானந்தஐயரிடம் அந்த சுவாமிகள் வழங்கினார்கள்.

செல்வி செல்வறோசா அவர்கள் தான் கதிர்காமம் செல்லும் நிலையில் தான் ஒரு இளம்பெண்ணாக இருக்கின்ற காரணத்தால் பாதுகாப்பாக தங்குவதற்கும் செயற்படுவதற்கும் என்ன செய்வதென்று குழம்பிப்போய் இருந்த சூழ்நிலையில் இவ்வாறான ஒரு வசதி கிடைத்தது. அவர் கதிர்காமம் செல்வது தொடர்பாக பெரிய மகிழ்ச்சியையும், தைரியத்தையும் ஏற்படுத்தியது. எனவே, செல்வி செல்வறோசா அவர்கள் அடுத்த நாளே கதிர்காமம் செல்வதற்கு திட்டமிட்டார்.

கதிர்காமக் கந்தனின் உற்சவத்திற்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து வேல் செல்லும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்திருக்கும் அரசமரத்தடியிலிருந்தே வழி அனுப்பப்படுவதை அடியார்கள் அறிவார்கள். இந்த அரசமரத்தடி யிலிருந்து கதிர்காமம் என்ற பெயர்ப்பலகையுடன் தொடர்ச்சியாக பல பஸ்வண்டிகள் கதிர்காமம் செல்வதை சந்நிதியான் செல்வறோசாவுக்கு ஏற்கனவே கனவில் காட்டியதன் மூலம் எவ்வாறு கதிர்காமத்திற்கு வரவேண்டுமென்ற விடயத்திற்கு பஸ்வண்டியினூடாகவே கதிர்காமத்திற்கு பிரயாணம் செய்யலாம் என செல்வறோசா ஏற்கனவே தீர்வுகண்டுவிட்டார். தற்பொழுது கதிர்காமத்திற்கு சென்றவுடன் சகல உதவிகளைப் பெறுவதற்கும் கதிர்காமத்திலிருந்து வந்த சுவாமிகள் மூலம் வழிபிறந்துவிட்டது. இப்பொழுது எஞ்சியிருப்பது இளம்பெண்ணாண தான் யாருடைய துணையுடன் கதிர்காமம் செல்வது என்ற பிரச்சனை மட்டுமே.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு இவருக்கு நீண்ட நேரம் எடுக்கவில்லை. இதைப் பற்றிச் சிந்தித்தபொழுதே திடீரென்று இவரது சிந்தனையில் நாம் கடந்த இரண்டு கட்டுரைகளிலும் குறிப்பிட்ட அம்மையாரான பேபி அக்காவுடைய ஞாபகம் மனதில் தோன்றியது. மருதர் கதிர்காமருடைய வழித்தோன்றலான அந்த அம்மையாரிடம் சென்று தான் கதிர்காமம் செல்லவேண்டுமென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் துணையாக வருமாறும் கேட்டபொழுது அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார்.

07.11.2004 ஞாயிற்றுக்கிழமை செல்வறோசாவும் அம்மையாரும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து தமது கதிர்காம யாத்திரையை ஆரம்பித்தனர்.

இரண்டு பெண்களும் தனியாக மேற்கொண்ட மேற்படி யாத்திரையில் பல பிரச்சனைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தாலும் அடுத்த நாள் திங்கட்கிழமை மாலை கதிர்காமத்தைச் சென்றடைந்தார். அங்கேயும் சகோதர இனத்தவரான சிங்கள மக்களே அதிகளவில் காணப்பட்டதால் உண்மையில் அவர்கள் பய உணர்வுடனேயே காணப்பட்டனர். ஆனாலும் தமக்கு சகல உதவிகளையும் செய்வதற்கு ஆயத்தமாக உள்ள சுப்பிரமணியச் சுவாமிகளைச் சந்தித்தவுடன் தமது இவ்வாறான பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு கதிர்காமக் கந்தனை மனம் குளிர வழிபடப்போகின்றோம் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அவர்களுக்குப் பெரிய நிம்மதியை அளிப்பதாக இருந்தது.

கதிர்காமத்தில் தெய்வானை அம்மன் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர் கிருஷ்ணகுமாரசர்மா அவர்களையும், அந்த ஆலயத்தில் தங்கியிருக்கின்ற யோசுவாமிகளையும் அந்த ஆலயத்தில் இவர்கள் முதலில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த சந்திப்பு இவர்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இவர்களிடம் தாம் வந்த நோக்கத்தைக் கூறியதுடன் தமக்கு ஆதரவளித்து உதவி செய்வதாகக் கூறிய அந்த சுவாமிகளுடைய இடத்தை காண்பிக்குமாறு தாம் கொண்டு சென்ற அந்த விலாசத்தைக் காண்பித்தார். இந்த விலாசத்தைப் பார்வையிட்ட கிருஷ்ணகுமாரசர்மா என்ற அந்தப் பூசகரும் யோசுவாமிகளும் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தனர். ஆம்! கதிர்காமத்தில் சுப்பிரமணியசுவாமிகள் என்று யாருமே இல்லை என்றும் அதேபோன்று தெய்வானை அம்மன் கல்யாண மண்டபம் என்று எதுவும் இல்லை என்ற உண்மையை வெளிப்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் இப்படிப்பட்ட ஒருவரை நம்பி யாழ்ப்பாணத்திலிருந்து தனியாக கதிர்காமம் வந்த இவர்களுடைய அறியாமையையும் இவர்களுக்கு எடுத்துக்கூறினார்கள்.

ஆனாலும் செல்வறோசா என்ற இளம் பெண்ணினதும் அந்த அம்மையாரினதும் பரிதாப நிலையை உணர்ந்துகொண்ட அந்த இருவரும் தாம் அவர்களுக்கு அபயம் அளித்து வேண்டிய உதவிகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டார்கள்.

இவ்வாறு எதிர்பார்த்து வந்த சுவாமிகள் தொடர்பாக இவர்கள் பெரிய ஏமாற்றம் அடைந்தாலும் கதிர்காமக் கந்தனை வழிபடப் போகின்றோம் என்ற பெரிய மனநிறைவு ஏற்பட்டது. அன்று திங்கட்கிழமை மாலை மாணிக்க கங்கையில் நீராடியபின் கதிர்காமக் கந்தனை வழிபடுவதற்காக கந்தப்பெருமானுடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தனர்.

அங்கே கந்தப்பெருமானது ஆலயத்தில் இவர்களை எதிர்பார்த்திருப்பது போன்ற உணர்வலைகளுடன் ஒரு இளைஞன் காணப்பட்டான். இவர்கள் என்றுமே பார்த்திராத அந்த இளைஞன் அடிக்கடி இவர்களை உற்றுநோக்கி தான் தேடுகின்றவர்கள் இவர்கள்தானா என்பது போன்ற உணர்வுகளுடன் இவர்களுக்காகவே காத்திருந்தவன் போலவும் இவர்களை அடையாளம் கண்டுவிட்டவன் போலவும் செயற்பட்டுக் கொண்டிருந்தான். இறுதியில் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இவ்வாறு செல்வி சி. செல்வறோசா, அம்மையார் ஆகிய இருவரையும் நோக்கி நடந்துவந்த இளைஞன் இவர்கள் எதிர்பார்ப்பதுபோல இவர்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தான். இவர்கள் இருவரிடமும் வந்துசேர்ந்த அந்த இளைஞன் நீங்கள் எங்கே இருந்து வந்துள்ளீர்கள் என்பன தொடர்பான விடயங்களை இவர்களிடமிருந்து அறிந்துகொண்டான். பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் மிகவும் பண்பான முறையிலும் இன்முகத்துடனும் இவர்களுடன் நடந்துகொண்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாருக்கும் செல்வறோசாவுக்கும் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது.

செல்வி சி. செல்வறோசா சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு புறப்படுகின்றபொழுது கதிர்காமத்தில் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுதல், கதிர்காமக்கந்தனை மனம்குளிர வழிபாடு செய்தல் ஆகிய காரியங்கள் முடிவடைந்தவுடனேயே அங்கிருந்து திரும்பி விடுவதென்ற முடிவுடன்தான் சென்றிருந்தார். இதற்கிணங்க கதிர்காமத்தில் திங்கட்கிழமை சாயரட்சப் பூசைக்கு முன்பே தனது தலைமுடியின் ஒரு பகுதியைக் கத்தரித்து மாணிக்க கங்கையில் நீராடினார்கள். அதன்பின் கந்தக்கடவுளது ஆலயத்திற்கு வந்து மாலைப் பூசையில் கந்தக்கடவுளை தரிசிப்பதற்காகக் காத்து நின்றார்கள்.

08.11.2004 திங்கட்கிழமை மாலைநேரப் பூசையின்பொழுது அடியார்கள் அதிகமாகவே காணப்பட்டனர். அடியார்கள் நிறைந்திருந்தமையாலும் புதிய இடமாக இருந்ததாலும் பூசையை, தீப ஆராதனைகளை முழுமையாகக் கண்டுகளிப்பதில் பல பிரச்சனைகளை இவர்கள் இருவரும் எதிர்நோக்க வேண்டி யிருந்தது. ஆனாலும் பெரும்பாண்மைச் சமூகத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் குறிப்பறிந்து நேரம் அறிந்து இவர்களுக்கு பொருத்தமான இடங்களில் நின்று வழிபாடு செய்வதற்கும், திருநீறு போன்ற பிரசாதங்களை அந்த நெருக்கடியின் மத்தியிலும் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கும் பல்வேறு உதவிகளை செய்து கொண்டிருந்தான்.

இவ்வாறு கதிர்காமக்கந்தனது பூசையை நிறைவான முறையில் காண்பதற்கும் வழிபாடு செய்வதற்கும் இவர்களுக்கு அந்த இளைஞன் முழு உதவிகளையும் செய்து கொடுத்தான். பூசை முடிவடைந்தபின் உடைத்த தேங்காயினுள் திருநீறு, புஸ்பங்கள் என்பவற்றை வைத்தும், அதைவிட காளாஞ்சி வழங்குவதைப் போன்று பழங்கள் பூமாலை என்பவற்றுடன் இன்னொரு பிரசாதத்தையும் இவர்களிடம் வழங்கியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய மாலைப் பூசையின் உபயகாரர் தாங்கள் தானோ என்று நினைக்கும் அளவுக்கு இவர்களுக்கு திருப்தி ஏற்பட்டது.



(கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூசையின் நடுவில் கப்புறாளைகள்)

கதிர்காமக்கந்தனது பூசை நடைபெறும் நேரம் அந்தப் பூசையைக் கண்குளிரக் கண்டு வழிபாடு செய்ய வேண்டுமென்று சந்நிதியிலிருந்து தல யாத்திரைக்குப் புறப்பட்ட செல்வறோசா வுக்கு தனது விருப்பம் முழுமையாக நிறைவேறிய திருப்தியில் கதிர்காமக்கந்தனது ஆலயத்தில் நின்று ஆனந்தக் கண்ணீர் சொரிய அவனது நாமங்களை உச்சரித்த வண்ணம் அவனுக்கு நன்றி செலுத்தி அவனது திருவருளை வியந்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்கள்.

இவ்வாறான ஒரு பக்தி நிலையில் செல்வறோசா மூழ்கி யிருக்கும்பொழுது ஏற்கனவே அவர்களுக்கு எல்லாவித உதவி களையும் கேட்காமலே குறிப்பறிந்து உதவிய அதே இளைஞன் பிரகாசிக்கின்ற ஒரு வேலுடன் தனக்கு அருகாமையில் நிற்பதை உணர்ந்து கொண்டார். அதுமட்டுமல்ல அந்த இளைஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தாருங்கள் இது உங்களுக்குத்தான் என்று கூறியவாறு அந்த ஒளி வீசுகின்ற வேலை செல்வறோசாவிடம் கையளித்தான்.

நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சம்பவங்கள் நிஜமாகத் தான் நடக்கின்றனவா என்ற சந்தேகம் செல்வி சி. செல்வரோசா வுக்கு ஏற்பட்டது. தன்னைச் சுதாகரித்தவாறு நிதானமாகச் சிந்திக்கலானார். தான் கதிர்காமத்திற்கு வந்தது தொடக்கம் தற்பொழுது தனது கைகளில் வேல் கிடைத்துள்ளது வரை உள்ள அனைத்துச் சம்பவங்களையும் ஒருமுறை மனதில் மீட்டுப் பார்த்தார்கள். இவை அனைத்தும் நிஜமாகவே நடந்து கொண்டிருக்கின்றது என்பதை செல்வி செல்வறோசா உறுதிப் படுத்திக் கொண்டாலும் இவை எல்லாம் இயல்பாக எவருக்கும் நடக்க முடியாதவை என்பதை அவரால் நன்கு உணரமுடிந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஏறத்தாழ இரண்டரை அடி நீளமான பார்ப்போரது உள்ளங்களைக் கவரக்கூடிய கதிர்காமக்கந்தனது வேல் ஒன்றும் தற்பொழுது தனது கைகளில் காணப்படுகிறது என்பது அவரை பக்தியின் உச்சநிலைக்கு கொண்டுசென்றுவிட்டது. ஆனாலும் அந்த வேலை இளைஞனிடம் பெற்றுக்கொண்ட செல்வறோசா அதனைப் புனிதமாகவும் பாதுகாப்பாகவும் சந்நிதிக்கு எடுத்துச் செல்வதற்கும் பேணுவதற்கும் தன்னைவிடப் பொருத்தமானவர் அம்மையார் என்பதை உணர்ந்து கொண்டவராய் அதனை அம்மையாரிடம் கையளித்தார்.

சந்நிதியானுடைய அருட்கடாட்சத்திற்கு உட்பட்டு சந்நிதியா னுடைய நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அம்மையாரிடம் செல்வறோசா வேலினைக் கையளித்தபொழுது அவரது உடல் புல்லரித்தது. உள்ளம் பக்தி உணர்வினால் அலைமோத தன்னை மறந்த நிலையில் முருக நாமங்களை உச்சரிக்கத் தொடங்கினார்.

இவ்வாறான பக்திப் பரவசத்துடன் செல்வி செல்வறோசாவும் அம்மையாரும் அன்று இரவுப் பொழுதை கழித்தபின் அடுத்தநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலேயே கதிர்காமத்திலிருந்து சந்நிதிக்குப் புறப்பட்டு வழியில் எங்குமே ஓய்வு எடுக்காது புதன்கிழமை பிற்பகல் சந்நிதியை வந்தடைந்தனர்.

தாம் பெற்றுக்கொண்ட வேலினை புனிதமாக சந்நிதிக்குக் கொண்டு செல்லவேண்டுமென்ற ஆர்வத்தால் தொடர்ச்சியாகப் பிரயாணம் செய்து சந்நிதியை வந்து சேர்ந்த நிலையில் இங்கே அவர்களை வரவேற்பது போல பூசைமணி ஒலித்துக் கொண்டிருந்தது. இது அவர்களுக்குப் பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அது மட்டுமல்ல அன்று புதன்கிழமை கந்தபுராணத்தின் இறுதிப் படிப்பும் வள்ளி அம்மன் திருமணத்திற் குரிய திருமண நிகழ்வுகளும் சந்நிதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ***செல்வச்சந்நிதியில் வள்ளியை கரம் பிடிப்பதற்கு முருகப் பெருமான் வேல்வடிவில் கதிர்காமத்தி லிருந்து வந்துள்ளார் என்ற உணர்வையே*** இது அங்கிருந்த அனைவருக்கும் ஏற்படுத்தியது.

மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த இந்த இரு பெண்களது கதிர்காம யாத்திரை தொடர்பான விடயங்களும் யாருக்கும் விளங்காத புதிராகவே உள்ளது. கதிர்காமத்தில் இவர்களை ஆதரித்து உதவிகள் செய்த தெய்வானை அம்மன் ஆலயப் பூசகரே, 'இந்த இளைஞனை உங்களுக்கு எவ்வாறு தெரியும் எப்போது அறிமுகமானீர்கள் நான் இந்த இளைஞனை என்றுமே காணவில்லையே' என்று தனது ஆதங்கத்தை இந்த இரு பெண்களிடமும் வெளிப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

முருகப்பெருமான் முதியவர் வேடத்தில் சென்று வள்ளியை ஏமாற்றி லீலைகள் செய்து திருவிளையாடல் செய்ததுபோல இங்கே செல்வறோசாவின் கதிர்காம யாத்திரையின் பொழுதும் செல்வச்சந்நிதிக்கு முதியவர் உருவில் வந்த முருகப் பெருமான் அவரை கதிர்காமம் வருமாறு அழைத்துவிட்டு கதிர்காமத்தில் ஒரு சாதாரண இளைஞன் வடிவில் வந்து எல்லா உதவிகளையும் செய்து தனது திருவிளையாடலை நடாத்தியுள்ளார்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் எட்டு

திரு. தி. தவபாக்கியராசா அவர்களின் சொந்த இடம் திக்கமாகும். அச்சுவேலியில் மணமுடித்து அச்சுவேலி என்ற விலாசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். இவர்கள் சந்நிதியில் இடம்பெறுகின்ற அன்னதானச் செயற்பாட்டிற்கு நீண்ட காலமாக காத்திரமான பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு திரு. திருமதி தவபாக்கியராசா என்ற அந்த குடும்பத்தினர் சந்நிதியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நித்திய அன்னதானப் பணியில் தம்மை எவ்வாறு இணைத்துக் கொண்டனர் என்பது தொடர்பான விடயங்களை இங்கே வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வுலகில் நாம் செய்கின்ற செயற்பாடுகள் மனித நேயம் கொண்டவையாகவும், தர்மத்தின் பாற்பட்டதாகவும் அமைய வேண்டுமென்ற சிந்தனையுடனும், இறை நம்பிக்கையுடனும் செயற்படுகின்ற அன்பர் திரு. தவபாக்கியராசா.

திரு. தவபாக்கியராசா அவர்களின் மனைவி மூன்று தடவைகள் கருத்தரித்த நிலையிலும் மூன்று தடவைகளும் குழந்தை குறைப்பிரசவமாகப் பிறக்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இது திரு. திருமதி தவபாக்கியராசா குடும்பத்திற்கு மிகுந்த மனத்தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக இருந்துவந்தது. நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் எமது கர்மவினைப்படியே நடக்கின்றன என்பதை திரு. திருமதி தவபாக்கியராசா குடும்பத்தினர் நம்புகின்ற இயல்புள்ளவர்களாக இருந்தமையால் வாழ்க்கையில் துன்பம் ஏற்படுகின்ற பொழுதெல்லாம் தங்களைத்தாமே தேற்றி வாழ்க்கையைப் போக்கிக் கொண்டிருந்தனர். ஆனாலும் இல்லற வாழ்க்கையில் குழந்தைச் செல்வம் இல்லாதவிடத்து அந்த இல்வாழ்க்கை பூரணத்துவம் அற்றதாகவே அமைந்துவிடும் என்ற யதார்த்தத்தை அவர்கள் உணர்ந்துகொண்ட பொழுது அதனைத் தாங்கிக் கொள்வது அவர்களுக்கு கஷ்டமாகவே இருந்தது.

இறைவழிபாட்டில் நம்பிக்கை உள்ள குடும்பமாக திரு தவபாக்கியராசாவின் குடும்பம் அமைந்திருந்த பொழுதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண இறைவழிபாட்டின் மூலம் தமக்கு பிள்ளைச் செல்வம் இல்லாத அந்தக் குறையைப் போக்கிக்கொள்ள முடியாது எனவும் உணர்ந்துகொண்டனர். இந்த வேளையில் இறைவழிபாட்டுடன் நாங்கள் செய்கின்ற தானதர்மங்கள் நிச்சயமாக எமது இல்வாழ்க்கையில் நற்பயன்களைப் பெற்றுத்தரக்கூடியவை என்பதையும் உணர்ந்துகொண்டனர். மேலும் நாங்கள் செய்கின்ற தான தர்மங்கள் அதனைப் பெற்றுப் பயன் அடைபவர்களுக்கு நேரடியாகப் பயன்படக்கூடியதாகவும் அதேநேரம் இறையருளும் நிறைந்ததான உண்மையான தர்மகாரியங்கள் எவை என்பதை ஆழமாக சிந்திக்கலானார்கள்.

இறுதியில் உண்மையான பக்தியுடன் ஆண்டவனை நாடிச்சென்று உள்ளம் உருகி வழிபட்டபின் பசிக்கொடுமையை எதிர்நோக்குகின்ற அடியார்கள் கூடுகின்ற ஆலயங்களாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்கள் பற்றியும் சிந்திக்கலானார்கள். அத்துடன் அந்த ஆலயங்களில் இடம்பெறும் அன்னதானச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கும் முன்வந்தார்கள். இதற்கிணங்கவே திரு தவபாக்கியராசா அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் அடியார்களுக்கு மேற்கொள்ளப்படும் நித்திய அன்னப்பணிக்கு மாதாமாதம் இரண்டு அரிசி மூடைகளை தொடர்ந்து வழங்கும் வழக்கத்தை ஆரம்பித்தார்கள். ஆம்! அவர்கள் எதிர்பார்த்தது போலவே அவர்கள் செய்த அன்னதானத் தர்மம் அவர்களுக்கு உடனடியாகவே பயனளித்தது. திருமதி யாழினி தவபாக்கியராசா அவர்கள் கருவுற்றது மட்டுமன்றி முன்பு ஏற்பட்டது போலன்றி குறைப்பிரசவ நிலையைத் தாண்டி குழந்தைப் பேற்றுக்குரிய மாதத்தை அடைந்து பிரசவத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் அவர்கள் குழந்தைப்பேறு தொடர்பான வழமையாக சிகிச்சை பெற்று வந்த கொழும்புத்துறையில் உள்ள திருச்சிலுவை வைத்தியசாலைக்குச் சென்று அங்கே வழமையாகக் காட்டுகின்ற வைத்தியநிபுணர் நவநீதன் அவர்களிடம் பிறக்கப் போகின்ற குழந்தைப்பேறு தொடர்பாக ஆலோசனையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார்கள். வைத்தியநிபுணர் நவநீதன் அவர்கள் ஏற்கனவே திருமதி யாழினி அவர்களுக்கு மூன்று தடவைகள் குறைப்பிரசவம் நடைபெற்றது போன்ற பல விடயங்களையும் கருத்தில் எடுத்து ஆழமாகவும் ஆறுதலாகவும் பரிசோதித்த பின் 23.10.2004 ஆம் திகதியைக் குறிப்பிட்டார்கள். இந்த திகதிக்கு முன்பு குழந்தை இயல்பாகப் பிறக்காவிட்டால் 23.10.2004 இல் சத்திரசிகிச்சை செய்வது பொருத்தமானது என ஆலோசனை வழங்கினார்கள். ஆனாலும் 28.10.2004 ஆம் திகதிக்கு முன்பு தமது குழந்தைப்பேறு தொடர்பாக நல்லகாரியம் இடம்பெறும் என்பது தொடர்பாக சந்நிதியானது திருவருளினால் சில குறிப்புக்கள் வெளிப்பாடுகள் மூலம் தனது உள்ளுணர்வால் திரு தவபாக்கியராசா அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதனைப் பற்றி எதுவும் வெளிப்படுத்தாத நிலையில் திரு தவபாக்கியராசா அவர்கள் 23 ஆம் திகதிக்கு பதிலாக 28 ஆம் திகதி சத்திரசிகிச்சையை வைக்கலாமா? என வைத்திய நிபுணரிடம் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொண்டார்கள். வைத்திய நிபுணரும் அதற்கு சம்மதித்தார்கள். இந்த நிலையில் இயற்கைப் பிரசவத்திற்காக வைத்திய நிபுணர் கூறி அவர்கள் எதிர்பார்த்த 23 ஆம் திகதி என்ற காலக்கேடு முடிந்த நிலையில் 26.10.2004 இல் திரு தவபாக்கியராசா அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று 28 ஆம் திகதி மனைவிக்கு சத்திரசிகிச்சை செய்வதற்காக தேவைப்படும் பொருத்தமான ஒழுங்குகள் போன்ற முன் ஆயத்தங்கள் எல்லாம் செய்து முடித்தார்கள்.

28.10.2004 சத்திரசிகிச்சைக்கு முதல்நாள் அதாவது 27 ஆம் திகதி காலையில் திருமதி யாழினி தவபாக்கியராசாவை அவர்கள் ஒழுங்குசெய்த கொழும்புத்துறை திருச்சிலுவை தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவருக்கு குழந்தை இயல்பாகப் பிறப்பதற்குரிய சிறிய அறிகுறி இருந்தாலும் இனிமேல் நாள்கணக்காக பொறுக்க முடியாது என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டனர். வைத்தியநிபுணர் அவர்களும் திருமதி யாழினி அவர்களை பரிசோதித்து விட்டு 27 ஆம் திகதி அதாவது அன்று காலை பகல் 12 மணிவரை பார்த்துவிட்டு சத்திரசிகிச்சை செய்வதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு தாதிமாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள். இதற்கிணங்க அவர்களும் அதற்கான ஆயத்தங் களைச் செய்யத் தொடங்கினார்கள்.

திரு. தவபாக்கியராசாவின் உள்ளம் மட்டுமல்ல உடலும் பதட்டமடையத் தொடங்கியது. மனிதர்களின் கைகளில் எதுவுமே இல்லை எல்லாமே இறைவன் சித்தமே நடக்கின்றன என்பதை திரு. தவபாக்கியராசா அவர்கள் நன்கு விளங்கிக்கொண்டவர். தற்பொழுது பகல் 12 மணிக்குள் குழந்தை இயல்பாகவும் சுகப் பிரசவமாகவும் பிறக்கவேண்டும் அல்லது சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டுமென்ற நிலையில் எது நடந்தாலும் விபரீதம் எதுவும் நடந்துவிடக்கூடாது என்ற சிந்தனை அவரது மனதில் அலை மோதிக்கொண்டிருந்தது. இறுதியாக சந்நிதி முருகனது திருப்பாதங்களில் தன்னை முழுமையாக ஒப்புவித்தார்கள். சந்நிதி முருகா! அன்னதானக்கந்தா! ஆற்றங்கரைவேலவா! என்று அவரது நாமங்களை திரு. தவபாக்கியராசா அவர்களது உள்ளம் இடை விடாது சிந்தித்துக்கொண்டே இருந்தது. என்ன ஆச்சரியம் வைத்திய நிபுணர் சத்திரசிகிச்சைக்காக குறிப்பிட்ட பகல் 12 மணிக்கு 15 நிமிடங்கள் முன்பாக அவரது மனைவி இயல்பாகவும் சுகப்பிரசவமாகவும் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார்கள்.

வைத்திய நிபுணரும் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த அனைவரும் இது ஒரு அற்புதமான நிகழ்வு என்பதை திரு திருமதி தவபாக்கியராசா குடும்பத்திற்கு கூறி உங்களுக்கு நிச்சயமாக இறைவனது நல்லாசிகள் இருக்கின்றது என்பதையும் உணர்ச்சி பொங்க எடுத்துக் காட்டினார்கள். சந்நிதியானது அற்புதத்தை நினைத்து ஆனந்தப் பரவசமடைந் திருந்த திரு தவபாக்கியராசா அவர்களின் உள்ளத்தை கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த அந்த ஆஸ்பத்திரி ஊழியர்களின் கூற்றுக்கள் மேலும் ஒருபடி உருகச்செய்தது.

ஆம் சந்நிதியானது அன்னதான தர்மம் அனைவருக்கும் அனைத்தையும் வழங்கும் ஆற்றல் நிறைந்தது.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஒன்பது

புதூர் நாகதம்பிரான் ஆலயம் வவுனியா நகரிலிருந்து வடக்கே ஏறத்தாழ 30 கிலோமீற்றர் தூரத்தில் இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கோயிலாகும். இங்கே வருடாவருடம் வைகாசி மாதம் நடைபெறும் பொங்கல் திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெறுவதுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் வன்னிப்பகுதியின் பல்வேறு இடங்களிலிருந்து ஒன்றுகூடி இந்தப் பெருநாளை பக்திப் பரவசத்துடன் அனுசரித்து வருகின்றனர். கிராமியச் சூழலில் பெரும்பாலும் பாமர மக்கள் ஒன்றுகூடுகின்ற இந்த ஆலயத்தில் காவடி ஆட்டம், தீ மிதித்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் சந்நிதி ஆலயத்தைப் போல குறிப்பிட்ட பரம்பரையைச் சேர்ந்தவர்களே இந்த ஆலயத்திற்கு பூசை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர்கள் சந்நிதி ஆலயத்துடன் நீண்டகாலத் தொடர்புள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் பூசை செய்கின்ற பூசகர்கள் சந்நிதியானிடம் உள்ள நம்பிக்கை காரணமாக தமது குடும்பத்தில் நிகழும் சகலவிதமான செயற்பாடுகளின் பொழுதும் சந்நிதியானை மனதில் நிறுத்தி செயற்படும் வழக்கத்தை கடைப்பிடித்து வருகின்றனர். முக்கியமாக மருந்தினால் மாற்ற முடியாத பல வருத்தங்களை சந்நிதிக்கு வந்து சந்நிதியானுடைய கருணை யினால் மாற்றிச் சென்றுள்ளதை எம்மால் அறியமுடிகின்றது.

1996 ஆம் ஆண்டு புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பூசகர் குடும்பத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் தனது மோசமான வருத்தத்தினால் துன்பப்பட்டு இறுதியில் அந்த வருத்தத்தை தீர்ப்பதற்காக சந்நிதியானிடம் வந்து சேர்ந்தார்கள். இந்த அம்மையார் சந்நிதி ஆலயத்தின் கிழக்குத் திசையில் உள்ள பிரதான வீதியில் பிரக்கிராசி ஐயர் வீட்டிற்கு முன் உள்ள அரசமரத்துடன் இணைந்துள்ள அந்தக் கட்டிடத் தொகுதியில் தங்கியிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றில் நீராடி ஆலயப்பூசைகளில் பங்குகொண்டு சந்நிதியானைத் தியானித்த வண்ணம் அவனது நினைவுடனேயே தினமும் தனது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு அந்த அம்மையார் பல நாட்கள் ஆலயத்தில் தங்கியிருந்து ஆலயத்தொண்டுகள் செய்து சந்நிதியானை உண்மையான விசுவாசத்துடன் வணங்கிக் கொண்டிருந்த நிலையிலும் அவரது வருத்தம் சுகமடையவில்லை. அதுமட்டுமன்றி நோயின் காரணமாக அவர் தினமும் அனுபவித்து வரும் உடல் வேதனையும் குறைவடையவில்லை.

இவ்வாறு வேதனையுடன் தங்கியிருந்த அந்த அம்மையாருக்கு மேலும் வேதனை ஏற்படக்கூடிய நிகழ்வுகளே அங்கே ஏற்பட்டுக்கொண்டிருந்தன. நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த அந்த அரசமரக் கட்டடத் தொகுதியில் தங்கியிருந்த மேற்படி அம்மையார், ஒரு நாள் காலையில் நித்திரைவிட்டு எழுந்தவுடன் தற்பொழுது பூசகராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சின்னக்குட்டி ஐயா என அழைக்கப்படும் திரு த. அகிலேந்திர ஐயாவின் தாயாரான திருமதி தங்கராசா ஐயர் (பண்டார ஐயர்) இராசமணி (இராசாத்தி) அவர்களிடம் சென்றடைந்தார்கள்.

மிகுந்த கவலையுடனும் விரக்தியுடனும் காணப்பட்ட அந்தப்பெண் சின்னக்குட்டி ஐயாவின் தாயாரான திருமதி த. இராசமணி அவர்களிடம் சென்று பின்வருமாறு தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டார்கள். ‘இதற்கு முன்பு பலமுறை சந்நிதியானிடம் வந்து வணங்கி என்னுடைய வருத்தத்தைப் போக்கி திருப்தியுடனும் நிம்மதியுடனும் வீடு திரும்பியுள்ளேன். இந்த முறை எனது வருத்தத்தைத் தீர்ப்பதற்காக சந்நிதியானிடம் வந்து பல நாட்கள் ஆகிவிட்டன. ஆயினும் எனது வருத்தம் சிறிதும் தீரவில்லை. எனது உடல் வேதனையும் குறையவில்லை. நான் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றேன். அது மட்டுமல்ல **இன்று இரவு நீ இங்கே இருக்கவேண்டாம் உடனே ஊருக்குப் போ** என்று முருகன் சொல்லிவிட்டார். இவ்வாறு சந்நிதியான் கூறியபின் நான் என்ன செய்வேன்! யாருடைய உதவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுவேன்! என்று கண்ணீர் மல்க தனது பரிதாப நிலையை இராசமணி அம்மாவிடம் எடுத்துக் கூறினார்கள். அத்துடன் நான் தனித்து நடமாட முடியாத உடல்நோயுடன் இருக்கும்பொழுது முருகப்பாவும் நீ உடனே ஊருக்குப்போ எனக் கூறியுள்ளதால் இந்த உடல்நோயுடன் இவ்வளவு தூரம் இந்த கொம்படிப் பாதையூடாக தனித்துப் பிரயாணம் செய்து எவ்வாறு ஊருக்குப் போகமுடியும்? 'நீங்கள் தான் எனக்கு எப்படியாவது உதவ வேண்டும்' என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டார்கள்.

மருதர் கதிர்காமர் பரம்பரையைச் சேர்ந்த சின்னக்குட்டி ஐயாவின் தாயாரான திருமதி த. இராசமணி அவர்கள் சந்நிதியானிடம் ஆழமான பக்தியும் அசையாத நம்பிக்கையும் கொண்டவர். சந்நிதியானின் அருட்கடாட்சத்தினைப் பெற்றிருப்பதுடன் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை ஆலயத் தொண்டுகள் செய்து ஆலயத்திலும் ஆலயச் சூழலிலுமே போக்கிக்கொண்டிருப்பவர். இத்தகைய இயல்புகள் கொண்ட திருமதி த. இராசமணி அவர்கள் சந்நிதியானை நாடிவந்த அந்த புதூர் நாகதம்பிரான் ஆலயத்தைச் சேர்ந்த அம்மையாரது பரிதாப நிலையைக் கண்டு மனம் இரங்கினார்கள். அந்த அம்மையாரது துன்பத்தைப் போக்குவது தனது கடமை மட்டுமல்ல அது சந்நிதியானுக்குச் செய்கின்ற ஒரு தொண்டு எனவும் உணர்ந்து கொண்டார்கள். ஆனாலும் எவ்வாறு தன்னால் அந்த அம்மையாருக்கு உதவமுடியும் என்று குழப்பம் அடைந்தார்கள்.

இறுதியாக தனது மகன் திரு த. அகிலேந்திர ஐயாவை அழைத்து அந்த அம்மையாரின் சொந்த இடமான புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்குக் கூட்டிச்சென்று அங்கே அவரைச் சேர்ப்பிக்குமாறு விநயமாகக் கேட்டுக்கொண்டார்கள். ஆலயத்தில் பூசகராக செயற்படுவதை தொழிலாக மட்டுமன்றி ஒரு தொண்டனாக நினைத்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் சின்னக்குட்டி ஐயா என அழைக்கப்படும் திரு த. அகிலேந்திர ஐயா அவர்கள் தாயின் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். ஆபத்தானதும் மிகுந்த சிரமங்கள் நிறைந்ததுமான கொம்படிப் பாதையூடாக அந்த அம்மையாரை அழைத்துச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதூரில் அவரது உறவினர்களிடம் சேர்ப்பித்துவிட்டு அடுத்த நாள் வீடு திரும்பினார்கள்.



(புதூர் நாகதம்பிரான் அடியவரை அவரது இடத்திற்கே பாதுகாப்பாக அனுப்பிவைத்த திருமதி தங்கராசா ஐயர் இராசமணி அவர்கள்)

என்ன ஆச்சரியம்! இந்த சம்பவம் இடம்பெற்று சரியாக இரண்டாம் நாள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அதன் சுற்றாடல் பகுதி மற்றும் தொண்டமானாற்றின் ஏனைய இடங்களைக் குறிவைத்து சுப்பர்சொனிக் குண்டுவீச்சு விமானம் குண்டுகளைப் பொழிந்ததுடன் பலாலியில் இருந்தும் ஷெல் வீச்சுக்களை இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதனால் ஆலயத்திலும் ஆலயச் சூழலிலும் தங்கியிருந்த பலரும் அவ்விடத்தைவிட்டு இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவன மண்டபம் மற்றும் ஆலயத்தின் பல பகுதிகள் சேதமாக்கப்பட்டதுடன் பலர் காயமடையும் நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் தனது இருப்பிடத்திற்குச் சென்றதனால் புதூர் நாகதம்பிரான் ஆலய பூசகர் பரம்பரையைச் சேர்ந்த அந்த அம்மையார் இந்த அசம்பாவிதங்கள் எதற்கும் உட்படாது சந்நிதியானுடைய கருணையினால் காப்பாற்றப்பட்டார்கள். அதுமட்டுமல்ல அவரது வருத்தமும் படிப்படியாகக் குறைவடைய ஆரம்பித்தது. சில காலத்தின் பின்பு பூரண சுகமடைந்த நிலையில் சந்நிதிக்கு வந்து சந்நிதியான் செய்த அற்புதத்தை வியந்து சந்நிதியானுக்கு விஷேடபூசைகள் செய்து உள்ளம் உருகி வழிபாடு செய்தார்கள். அத்துடன் அடையாளம் காணமுடியாத அளவுக்கு திடகாந்திரமாகத் தோற்றமளித்த அந்த அம்மையார் சின்னக்குட்டி ஐயாவையும் அவரது தாயாரையும் நாடிச்சென்று சந்தித்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அனைவரும் சந்நிதியானது அற்புதத்தை வியந்து ஆனந்தப் பரவச மடைந்தார்கள்.

தற்பொழுது இந்த அம்மையார் முழுமையான உடல் ஆரோக்கியத்துடன் வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். 2003ஆம் ஆண்டு தனது வெளிநாட்டிலுள்ள மகனுடன் இங்கே வந்து விஷேட அபிஷேகங்கள் நடாத்தியுள்ளார். அவருடைய உடல் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததால் இந்த அம்மையாரை குட்டி ஐயா அவர்கள் இனங்காண முடியவில்லை. ஆனால் அன்றைய தினப்பூசைக்குரியவராக குட்டி ஐயாவே வந்துள்ளார். இந்த நிலையில் அந்த அம்மையார் குட்டி ஐயாவிற்கு மீண்டும் தன்னை அறிமுகம் செய்து ஆனந்தம் அடைந்தார்கள்.

ஆம் சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன் மட்டுமல்ல தன்னை நாடிவருகின்ற உண்மையான அடியவர்களுக்கு அற்புதங்கள் நிகழ்த்தி அவர்களை ஈடேற்றுகின்ற அற்புதக் கந்தனாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றான்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பத்து

ஈழத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களாக கதிர்காமக் கந்தன் ஆலயமும், ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும் விளங்கு கின்றன. இந்த இரண்டு ஆலயங்களும் வரலாற்றுக் காலம் தொடக்கம் தொடர்புள்ளவையாக இருந்துவருவது குறிப்பிடத் தக்கது. அத்துடன் பூசை முறைகள், வழிபாட்டு முறைகள், கடைப்பிடிக்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்ற பல்வேறு அம்சங்களிலும் நெருக்கமான ஒற்றுமைப் பண்புகளைக் கொண்டிருப்பதையும் அவதானிக்கமுடியும். இதேபோன்று அடியார்களுக்கு அற்புதங்களை நிகழ்த்துவதிலும் இரண்டு ஆலயங்களும் பிரசித்தி பெற்றவையாகவுள்ளன.

மாதகலைச் சொந்த இடமாகக் கொண்ட சிவபாக்கியம் என்ற அம்மையார் நீண்டகாலமாக கதிர்காமத்தில் தங்கியிருந்த பின் 2005ஆம் ஆண்டளவில் சந்நிதியானுடைய அழைப்புக் கிடைத்ததற்கிணங்க சந்நிதி ஆலயத்திற்து வந்து இங்கேயே தங்கியிருந்து வழிபாடு செய்து வந்தார்கள். இரண்டு ஆலயங்களிலும் பல அற்புத அனுபவங்களை இந்த அம்மையார் அனுபவித்துள்ளார்கள். இந்த அம்மையார் கதிர்காமத்தில் தங்கியிருந்தபோது அங்கே இடம்பெற்ற பல அற்புதங்களை நேரடியாகக் கண்டுகளித்துள்ளார். அவ்வாறு மெய்யடியார் ஒருவருக்கு கதிர்காமக்கந்தன் நிகழ்த்திய அற்புதமான நிகழ்வினை இந்த அம்மையார் அப்பொழுது அடியேனுக்கு வெளிப்படுத்தினார்கள்.

1985 ஆம் ஆண்டு கதிர்காமக்கந்தனது உற்சவம் நடை பெற்றுக்கொண்டிருந்தது. மட்டக்களப்பில் சம்மாந்துறை என்ற இடத்தைச் சேர்ந்த அம்மையார் ஒருவர் வயது முதிர்ந்த தனது தாயாருடனும், தனது நான்கு பிள்ளைகளுடனும் கதிர்காமக் கந்தனது உற்சவத்திற்கு வருகை தந்திருந்தார்கள். 13 ஆம் நாள் உற்சவம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கே பழனி ஆண்டவர் ஆலயத்தில் பல அடியார்கள் பக்திப்பரவசத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜனை நிகழ்வை நடாத்திக் கொண்டிருந்தார்கள். பஜனை நிகழ்வில் இந்த வயது முதிர்ந்த அம்மையாரும் இணைந்து செயற்படுவதற்கு விருப்பம் கொண்டார்கள். இந்த நிலையில் மலையுச்சிக்கு ஏறுவதற்கு ஆயத்தம் செய்த அந்த சம்மாந்துறையைச் சேர்ந்த அம்மையார் தனது கடைசிப் பிள்ளையை தங்களுடன் மலை உச்சிக்கு அழைத்துச் செல்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற் எடுத்து அந்தக் கடைசிப் பிள்ளையை பஜனைக் கோஷ்டியில் இணைத்து செயற்பட விரும்பிய பேத்தியாரிடம் கையளித்துவிட்டு மலை உச்சிக்கு வழிபாடு செய்யச் சென்றுவிட்டார்கள்.



(கதிர்காமத்தில் மலைத் தரிசனத்திற்காக அடியார்கள் சென்றுவரும் காட்சி)

தனது மூன்று பிள்ளைகளுடனும் மலை ஏறித் தரிசனத்தை முடித்துக்கொண்டு கீழே இறங்கிவந்த சம்மாந்துறையைச் சேர்ந்த அந்த அம்மையார் எல்லோரும் மீண்டும் ஒன்று சேர்வதற்காக பேத்தியாருடன் இருந்த கடைசிப் பிள்ளையைப் பார்க்கச் சென்றார்கள். அங்கே பேத்தியார் பேரக்குழந்தையைத் தவறவிட்ட நிலையில் பரிதவித்துக் கொண்டிருப்பதைக்கண்டு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் மனம் பதைபதைத்தார்கள். அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடியும் பிள்ளையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



(கதிர்காமக் கந்தனது முகப்புத் தோற்றம்)

இவ்வளவு கஷ்டங்களையும் கடந்து சம்மாந்துறையிலிருந்து இறைவழிபாட்டிற்காக கதிர்காமக்கந்தனிடம் அவனை நம்பிவந்த நிலையில் இவ்வாறானதொரு வேதனை ஏற்பட்டதை எண்ணி அந்த அம்மையார் மிகவும் மனம் வருந்தினார்கள். இறுதியாக வேறுவழி இல்லாமல் கதிர்காமக்கந்தனது வாசலுக்கே சென்று அவனிடமே நேரடியாக முறையிட்டு தனது பிள்ளையை எப்படியாவது தன்னிடம் மீட்டுத்தருமாறு மன்றாடிக் கேட்பதற்கு முடிவுசெய்தார்கள்.

மட்டக்களப்பு, சம்மாந்துறையைச் சேர்ந்த நான் எனது தாயாருடனும் நான்கு பிள்ளைகளுடனும் இங்கே வழிபாடு செய்ய வந்தோம். திரும்பிப்போகும்பொழுது எவ்வாறு மூன்று பிள்ளை களுடன் போகமுடியும். ஆகவே, கதிர்காமக்கந்தா உன்னை நம்பிவந்த எனக்கு நீதான் கருணை பொழிய வேண்டுமென்று கண்ணீர்விட்டு மன்றாடி வழிபாடு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வழிபாடு செய்த அந்த அம்மையார் தனது கவலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கதறி அழுது புலம்பத் தொடங்கினார்கள். இங்கே சந்நிதியான் ஆலயத்தில் பக்தி மேலீட்டால் எவ்வாறு அடியார்கள் தமது நெருங்கிய உறவினர்களுடன் அல்லது நெருக்கமாக அன்பு வைத்துக் கொள்பவர்களிடம் பெயர் சொல்லி வாய்விட்டுக் கதைத்து தமது உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்களோ அதேபோன்று இந்தத் தாயும் கதிர்காமக்கந்தனைப் பார்த்து 'நீயும் கள்வன் என்னுடைய பிள்ளையை என்னிடம் இருந்து பிரிக்கப்பார்க்கிறாய் என்ர பிள்ளையை என்னிடம் தந்தால்த்தான் நான் இவ்விடத்தைவிட்டுப் போவேன்' எனச் சத்தமிட்டுக் கதிர்காமக்கந்தனை பக்தி மேலீட்டால் வசைமொழிந்து வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது சோமிபால என்ற பூசைக்குப் பொறுப்பான கப்புறாளை வேதனையால் குழப்பமடைந்திருந்த அந்தப் பெண்ணிடம் வந்து என்ன நடந்தது என விசாரித்தார்கள். அப்பொழுது கதிர்காமத்தையே தனது வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்துவந்த மாதகலைச் சேர்ந்த கதிர்காமத்து பூ அம்மா என அழைக்கப்படும் சிவபாக்கியம் அவர்கள் நடந்த விடயத்தைக் கப்புறாளைக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இறுதியாக சோமிபாலா என்ற அந்தக் கப்புறாளை பிள்ளையைத் தவற விட்டிருந்த சம்மாந்துறையைச் சேர்ந்த அந்தப் பெண்ணிடம் ஒரு தேங்காய் வாங்கிவருமாறு கூறினார்கள். அந்தப் பெண்ணும் ஒரு தேங்காயை வாங்கி கப்புறாளையிடம் கொடுத்தார்கள். அந்தத் தேங்காயுடன் உள்ளே சென்ற கப்புறாளை 10 நிமிடங்களின் பின்பு மிகவும் சாந்தத்துடன் திரும்பிவந்து அந்தப் பெண்ணைப் பார்த்து நாளை 2 மணிக்கு முன்பு உனது பிள்ளை உனக்குக் கிடைக்கும் நீ வீட்டிற்குப்போ என அமைதியாக எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு அந்த அம்மையார் நான் வீட்டிற்குப் போவதாக இருந்தால் மட்டக்களப்பில் அல்லவா எனது வீடு இருக்கின்றது. நான் மட்டக்களப்பிற்கு அல்லவா போகவேண்டும். இங்கே கதிர்காமத்தில் நான் தவறவிட்ட பிள்ளையை அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் எவ்வாறு பெற்றுக்கொள்வேன். அங்கே எனக்கு எனது பிள்ளையை யார் தருவார்கள்? என்று தனது மனதில் எழுந்த சந்தேகங்களையெல்லாம் அந்த அம்மையார் கப்புறாளையிடம் கேள்விகளாகக் கேட்கத்தொடங்கினார்கள்.

அதற்கு அந்தக் கப்புறாளை பிள்ளை அங்கேதான் இருக்கிறது, பிள்ளை அங்கேதான் உனக்குக் கிடைக்கும். நீ கதிர்காமத்துக்கு முருகனைத்தானே நம்பி வந்துள்ளாய். கதிர்காமத்து முருகன் உனக்குப் பிள்ளையை அங்கே கிடைக்கச் செய்வார் என்று நம்பிக்கையுடனும் உறுதியான தொனியுடனும் அந்தப் பெண்ணுக்கு எடுத்துக்கூறி அவரை மட்டக்களப்பிற்கு அனுப்பிவைத்தார்.

மட்டக்களப்பில் சம்மாந்துறையில் இந்தக் குழந்தையைத் தவறவிட்ட பெண்ணினது வீட்டிற்கு அயல்வீட்டுப் பெண் கைக்குத்தல் அரிசியை அருகாமையிலுள்ள வேறொரு கிராமத்திற்குக் கொண்டுசென்று விற்பது வழக்கம். அவ்வாறு அரிசி விற்கச் சென்ற பெண் தான் வழமையாக அரிசி விற்கின்ற ஒரு வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே அந்த வீட்டில் உள்ள குடும்பத் தலைவியின் மடியில் இருந்து இந்தக் காணாமற்போன குழந்தை தொலைக்காட்சி பார்த்துக் பொண்டிருப்பதைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். அந்தக் குழந்தை காணாமற்போன அயல்வீட்டுக் குழந்தைதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டே அந்த அரிசி விற்கச்சென்ற பெண் உடனடியாகத் திரும்பி வந்து இங்கே தகவலைத் தெரிவித்தார்கள். ஆம்! கதிர்காமத்துக் கப்புறாளை குறிப்பிட்டது போல குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட அந்த நேரத்திற்கு முன்பு காணாமற் போன அந்தப் பெண்ணினது குழந்தை அவருக்கு கிடைத்துவிட்டது.

கதிர்காமத்துக் கப்புறாளை ஏற்கனவே குறிப்பிட்டதற்கிணங்க குழந்தை கிடைத்தபின் அந்தப்பெண் கதிர்காமத்துக்குச் சென்று கப்புறாளையிடம் குழந்தை கிடைத்த விடயத்தை ஆனந்தப் பரவசத்துடன் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நடந்த சம்பவத்தைக் கேட்ட சோமிபால என்ற கப்புறாளை முகமலர்ச்சியுடன் ஆலயத்திற்குள் சென்றார்கள். அங்கே வைத்திருந்த தேங்காயை எடுத்து அந்தப்பெண்ணிடம் வழங்கினார்கள். அதனைப் பெற்றுக்கொண்ட அந்தப் பெண் ஆனந்தக் கண்ணீர் சொரிய அதனை சிதறு தேங்காயாக அடித்துக் காணிக்கையை நிறைவு செய்தார்கள்.

ஆம் உண்மையான பக்தியுடன் கதிர்காம யாத்திரை செல்கின்ற அடியார்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை கதிர்காமக் கந்தனே போக்கிக்கொள்கின்ற இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே உள்ளன.

ஓம் முருகா!

## நாம் திருந்துவோமாக

சமூகம் என்பது நாமே. சமூகத்தில் நாம் ஒரு அங்கமாக இருந்துகொண்டு நம்மை நாமே திருத்திக் கொள்ளாமல் பல கெட்ட குண இயல்புகளை எமக்குள்ளே வைத்துக்கொண்டு பலபேர் மத்தியில் சமூகம் கெட்டுவிட்டது, ஊர் கெட்டுவிட்டது என புலம்பு கின்றோம். இது நம்மையும் சேர்த்து நாமே தூற்றுவதாகாதா?

நாம் திருந்த நம் உறவு திருந்தும். உறவு திருந்த ஊர் திருந்தும். ஊர் திருந்த உலகம் திருந்தும். ஆகவே இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது நம்மை நாமே திருத்திக்கொள்வதில் அக்கறை காட்டாதிருப்பதேயாகும். எனவே முதலில் நாம் திருந்துவோமாக.



289488 CC
14040 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. கலியுகக் கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்ட எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்கு கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும்பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

– ஆசிரியர்

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 0212264014

noolaham.org | aavanaham.org